Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 13 புதன்கிழமை (25.02.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 148

## படை வசமுள்ள காணிகள் அடையாளம் காண ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கில் படையினர் வசம் உள்ள தனியார் காணிகளை அடையாளம் காண்பதற்கு முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை அடையாளம் காணும் நோக்கில் நாளை மறுதினம் வட மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

முதற்கட்டமாக யாழ். குடா நாட்டிற்கு விஜயம் செய்யும் அமைச்சர், வடமாகாண இராணுவ உயரதிகாரிகள் மற்றும் வடமாகாண ஆளுநரை சந்திக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் சந்திக்க அவர் (19) ஆம் பக்கம் பார்க்க

# அரசு வழங்கிய நிதி செலவாகியது எப்படி?

## வடக்கு முதல்வருக்கு தெரியாது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக மத்திய அரசினால் வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி எப்படி செலவு செய்யப்பட்டது என்ற முழுமையான தகவல்கள் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு தெரிந்திருக்கவில்லை என்பதை மாகாணசபையின் நேற்றைய அமர்வில் அவரே ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் செலவு விபரங்கள் தொடர்பாக வடக்கு மாகாண அரசு கடந்த ஆண்டின் இறுதித்தினங்களில் வெளியிட்டிருந்த உத்தியோகபூர்வ நிதிக்கூற்று அறிக்கையில் காணப்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியபோது அதற்கு முதலமைச்சர் தெளிவான பதில் வழங்கவில்லை. மழுப்பலான பதில் வழங்கினார். மேலதிக கேள்விகள் தொடுக்கப்பட்ட போது தடுமாற்றமடைந்து அடுத்த அமர்வில் பதில்தருவதாக தெரிவித்து (19) ஆம் பக்கம் பார்க்க

## - ஐ.நா. தீர்மானத்தை எதிர்த்து -

# யாழில் பேரணி




(யாழ்ப்பாணம்)

ஐ.நா. மனித உரிமை விசாரணை அறிக்கையினை மார்ச்சில் வெளியிட்டு தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் உள்ளக விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் யாழில மாபெரும் பேரணி நேற்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியம் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமாகியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தலைவர் வாசு (19) ஆம் பக்கம் பார்க்க

## கூரையில் ஏறியவர் தவறிவிழுந்து மரணம்

யாழ்.கோண்டாவில் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்தவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.அரியாலைப் பகுதியை சேர்ந்த எஸ்.ஆனந்த் (வயது -42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நிறுவனம் ஒன்றில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் இவர், வீடொன்றின் கூரை நிர்மாணத்துக்காக உயரத்தில் (19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

சர்வதேச கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 19 பேரை இந்திய கரையோர காவல்படையினர் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## தவறணையில் தகராறு குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

கிளிநொச்சி பிரமந்தனாறு நாதன் குடியிருப்பு திட்டப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 4 பேர் கொண்ட கும்பல் ஒன்றால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த தர்மரத்தினம் தர்மசீலன் (வயது-32) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

கல்லாறு பகுதியிலுள்ள கள்ளுத் தவறணையில் நேற்று முன்தினம் மாலையில் சில நபர்களுக்கிடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக மேற்படி குடும்பஸ்தரின் வீட்டுக்குள் அன்று இரவு நுழைந்த கும்பலொன்று குடும்பஸ்தரை வாளால் வெட்டிக் கொலை செய்தது. சந்தேகநபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முனனெடுத்து வருவதாக பொலிஸார் கூறினர். (116)

## சம்பந்தனும் சுமந்திரனும் பேரணியை புறக்கணித்தது ஏன்?

### கிளம்புகிறது சர்ச்சை

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று ஐ.நா.வின் தீர்மானத்தை கண்டித்து நடாத்தப்பட்ட பேரணியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் உட்பட முக்கிய பிரமுகர்கள் பங்கு கொள்ளாமல் அந்தப் பேரணியை பகிஷ்கரித்துள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளவில்லை.

போர்க்குற்ற விசாரணை அறிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரிய சமூகத்தால் நேற்று , அமைதிப்பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐ.நா. விசாரணை அறிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி பல்கலைக்கழக ஆசிரிய சமூகத்தால் பெரும் எடுப்பில் அமைதிப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பேரணியில் கலந்து கொண்டிருந்தோர் பல்வேறு சுலோக அட்டைகளை தாங்கியிருந்தனர்.

யாழ்பல்கலைக்கழக முன்றலிலிருந்து ஆரம்பமான இப்பேரணி இராமநாதன் வீதி பலாலி வீதியூடாக கந்தர்மடம் சந்தியை சென்றடைந்து அங்கிருந்து நல்லூர் வடக்கு வீதியை சென்றடைந்தது.

அங்கு யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்படவி (19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மைத்திரியுடன் சிங்கப்பூர் அமைச்சர் சந்திப்பு



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த சிங்கப்பூர் வெளிவிவகார மற்றும் நீதி விவகாரங்களுக்கான அமைச்சர் கே.சண்முகம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

புதிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பில் சிங்கப்பூர் வெளி விவகார மற்றும் நீதி விவகாரங் (19) ஆம் பக்கம் பார்க்க

## விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு கனேடிய தூதுவருடன் ஆராய்வு



வடக்கில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் தொடர்பான அறிக்கையை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் செப்ரெம்பர் வரை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைத்திருப்பது தொடர்பாக இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் செலி விற்றிங்குடன் விரிவான கலந்துரை (19) ஆம் பக்கம் பார்க்க

# சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக சர்வேஸ்வரன்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசியப் பாடசாலை)யின் அதிபராக ந.சர்வேஸ்வரன் பொறுப்பேற்றுக்கொண்டார். கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர். வணிகத் துறைப் பட்டதாரி ஆவார்.

ஹோமகம கல்வி வலயத்தில் தமிழ்ப் பாடசாலைகளுக்கான கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி பின்னர் தென்மராட்சி கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். 111 வருட வரலாற்றைக் கொண்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 19 ஆவது அதிபராகப் இவர் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# யாழ்.மத்திய கல்லூரியில் ஜனாதிபதி விருது சாரணர் தேர்வு

இலங்கை ஜனாதிபதி சாரணர் விருதிற்கான நேர்முகத் தேர்வு நேற்று செவ்வாய்க் கிழமை இலங்கை சாரணர் தலைமையக பிரதி பிரதம ஆணையாளர் எஸ்.ஏ.அமரசிங்க தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் ச.சௌந்தரராஜனின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை சாரணர் தலைமையகத்தைச் சேர்ந்த ரூபன் ஆரியரத்தின, எஸ்.சௌந்தரராஜன், சரத் சோம விக்கிரமசிங்க, ஆர்.சசீதரன், ஜெகநாதன் அமிர்தன் ஆகியோர் பரீட்சகர்களாக கலந்து கொண்டார்கள்.

இலங்கை ஜனாதிபதி சாரணர் விருதிற்கான நேர்முகத் தேர்வில் வடக்கு, கிழக்கு மகாணங்களைச் சேர்ந்த 23 சாரணர்கள் தகுதி அடிப்படையில் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டார்கள்.

இவ் நேர்முகத்தேர்வு வடக்கு, கிழக்கு மகாணங்களைச் சேர்ந்த தமிழ் சராணியர்களுக்கு 2 ஆவது தடவையாக யாழ். மாவட்டத்தில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சென்ற வருடமும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதற்கு முன்னைய ஆண்டுகளில் இவ் விருதிற்கான நேர்முகத் தேர்விற்கு கொழும்புத் தலைமையகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (63).

# அநாதரவான முதியவர் வைத்தியசாலையில் மரணம்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் அநாதரவான நிலையில் கொண்டு வந்து விடப்பட்ட வயோதிபர் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை குருசுமத வடி என்னும் இடத்தைச் சேர்ந்த சின்னையா தணிகாசலம் என்பவரே கடந்த 18 ஆம் திகதி வைத்தியசாலையில் காலமானார். இவருக்கு வயது 80 ஆகும்.

மேற்படி வயோதிபருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்ததாகவும், ஒருவர் தனது விருப்பத்தின் பேரில் திருமணம் செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது பேரன் முறையான இளைஞன் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் சந்நிதி கோவிலுக்கு இவரை அழைத்து வந்து விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகயீனமான நிலையில் அப்பகுதிக் கிராம அலுவலரினாலும், சமூக சேவை உத்தியோகத்தரினாலும் இவ் வயோதிபர் மந்திகை வைத்திய சாலையில அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (137)



தூய கார்மேல் இளைஞர் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வில் கழக உறுப்பினர்களும், ஏனைய இளைஞர்களும் இரத்த தானம் செய்வதைக் காணலாம். (27)

# கம்பன் கழகத்தில் 'வித்தகம்'

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் 'வித்தகம்' நிகழ்வு நல்லூர் கம்பன் கோட்டத்தில் எதிர்வரும் 28.02.2015 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது

மங்கல விளக்கினை கிருபா, சாரதிப் பயிற்சி பயிலகத்தின் உரிமையாளர் திரு.திருமதி ஆ. கிருபாகரன் ஏற்றி வைப்பார்கள். கடவுள் வாழ்த்தினை நல்லூர் சாரங்கம் இசை மன்ற மாணவி செல்வி பிரசாந்தி இராஜ்குமார் வழங்குவார்.

வள்ளுவ நாடு என்னும் பொருளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராக கலந்த கொள்ளும் சிந்தனை அரங்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது. குறள்காட்டம் அரசன் இரா.செல்வடிவேல், குறள்காட்டும் அமைச்சன் ச.மார்க்கண்டு, குறள்காட்டும் குடிமகன்கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் மேற்கூறிய விடயங்களில் உரையாற்றவுள்ளார்கள். (63)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1138

திகதி 23.02.2015

வெற்றி எண்கள் 02 09 18 62 ஆங்கில எழுத்து J

ஜக்பொட் பரிசு ரூ. 1,39,76,940/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,39,76,940/= | ரூ. - |
| 4 இல்க்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 258 | 1,000/= | ரூ. 2,58,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 411 | 1,000/= | ரூ. 4,11,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11548 | 60/= | ரூ. 6,92,880/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5935 | 40/= | ரூ. 2,37,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 151168 | 20/= | ரூ. 30,23,360/= |
| ஆங்கில எழுத்து | 22040 | 20/= | ரூ. 4,40,800/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 65,63,440/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 14,272,580/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.26 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3817)


# திருமதி மைதிலி தயாபரனின் 'படைப்புக்கள் ஓர் அறிமுகம்'

(யுாழ்ப்பாணம்)

திருமதி மைதிலி தயாபரனின் 'படைப்புக்கள் ஓர் அறிமுகம்' நிகழ்வு வரும் முதலாம் திகதி பி.ப 3.00 மணிக்கு டேவிட் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக் கலாமன்ற அழகியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வேலணையூர் தாஸ் தலைமையில் உடைபெறும் இந்கிழ்வில் உரைகளை வி இ.வினோத்சத்தியபாலன் ந.குகபரன் சி.ரமேஸ் மைதிலி தயாபரன். யாழ் இலக்கியக் குவியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

# செட்டிபுலம் மக்களுடன் குறைகேள் கலந்துரையாடல்





வேலணை, செட்டிபுலம் பகுதி மக்களுடனான குறைகேள் கலந்துரையாடல் அண்மையில் செட்டிபுலம் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் வேலணைப் பிரதேச ஈ.பி.டி.பி. கட்சியின் அமைப்பாளரான சின்னையா சிவராசா (போல்) நிகழ்வில் கலந்து கொண்டு மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டார்..

வீதித்திருத்தம், பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, மக்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பான விடயங்கள் என்பன மக்களினால் முன்வைக்கப்பட்டது. (த)

# சுன்னாகம் குடிநீரில் நச்சுத்தன்மை; நரம்பு மண்டலத்தை பாதிக்கும்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் குடிநீரில் நச்சுத்தன்மை கலந்துள்ளதால், எதிர்கால சந்ததியினரின் நரம்பு மண்டலம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

சுன்னாகம் குடிநீர் பிரச்சினை தொடர்பில் ஆறு அம்ச பரிந்துரைகளை முன்வைத்து, யாழ்.மருத்துவ சங்கத்தினால் வடமாகாண முதலமைச்சருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

நச்சுத்தன்மை வாய்ந்த பகுதிகள் குறித்து ஆய்வு, பாதுகாப்பாக அவற்றை அகற்றுவது, நச்சுத்தன்மையின் வேரைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வு, நச்சுத்தன்மை கண்டுபிடிக்கப்பட்ட 4 கிணறுகளை அகற்றுதல், பாதிக்கப்பட்ட பகுதியில் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ்.மருத்துவ சங்கம், வடமாகாண முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளது. மேலும் இப்பிரச்சினையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தை தணிக்கும் வகையில் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

# மஞ்சள் கடவைகள் இல்லை நெருக்கடியில் போக்குவரத்து

அச்சுவேலி பகுதியில் உள்ள சில பிரதான வீதிகளில் மஞ்சள் கோட்டுக் கடவைகள் அமைக்கப்படாமையால் போக்குவரத்தில் ஈடுபடும் பாதசாரிகள் முதல் பாடசாலை மாணவர் மற்றும் ஏனைய பயணிகள் வீதிகளைக் கடக்க முற்படுகையில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலைகள், வங்கிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், கோவில்கள் போன்ற பகுதி வீதிகளிலேயே இவை அக்கியமாக போடப்பட வேண்டும் எனவும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் மஞ்சள் கோட்டுக்கடவை அமைக்கப்படாமையால் விபத்துகள் ஏற்படும் ஏது நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கும் இவர்கள் மஞ்சள் கோட்டுக் கடவை அமைக்கப்பட்டால் விபத்துக்கள் இடம்பெறுவதை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது வீதிகள் காப்பெற் இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் விபத்துக்களும் அதிகரித்துக் காணப்படுவதால் வீதியைக் கடக்க முற்படும் வேளையிலேயே சில விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் பிரதான வீதிகளில் மஞ்சள் கோட்டுக் கடவை போடப்படாதுள்ளமையால் விபத்துக்கள் ஏற்படக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# நகைகள் கொள்ளை

சாவகச்சேரி கப்பூதுப் பகுதியில் நகரசபை உத்தியோகத்தரை வாளால் வெட்டி நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.உதயகுமார் என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார். குறித்த உத்தியோகத்தர் கரவெட்டியிலிருந்து சாவகச்சேரிக்கு வந்துகொண்டிருந்த சமயம் கப்பூது வெளிப்பகுதியில் இனந்தெரியாத நபர்கள் இவரை வாளால்வெட்டி காயப்படுத்தி மோதிரம், சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (11)



இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தினை சந்தித்து கலந்துரையாடினார். (25)

# போலியான விண்ணப்பங்கள் இளைஞர், யுவதிகளுக்கு அறிவுறுத்து


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் தொழில் வாய்ப்புக்கென இவ்வருடத்தில் புதிய ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் எதுவும் கோரப்படவில்லை எனவும் போலியாக விற்கப்படும் விண்ணப்பங்கள் குறித்து இளைஞர் யுவதிகள் அவதானம் செலுத்த வேண்டும் என திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த திணைக்களத்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் யுத்த அனர்த்தங்களினால் வெகுவாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்ற இளைஞர் யுவதிகள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் ஆகியோருக்கு தற்போது வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டுக்கென புதிய பணியாளர்களை சேர்ப்பதற்கென அரசின் சுற்றுநிருபம் இதுவரை வெளிவரவில்லை எனவும் விண்ணப்பங்கள் கோரப்படவில்லை எனவும் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது திணைக்களத்தின் பேரில் போலியான விண்ணப்பங்கள் பணத்துக்காக விற்பனை செய்யப்படுகிறது. இது தொடர்பில் இளைஞர், யுவதிகள் ஏமாற வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (77)




அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவதற்கு வரிசையில் நிற்போர் யார் தெரியுமா?

1. வீ.ரி. தமிழ்மாறன்
2. சட்டத்தரணி தவராஜா
3. எம்.ஏ. சுமந்திரன்
4. மாவை சேனாதிராஜா
5. சுரேஸ் பிரேமச்சந்திரன்
6. அருந்தவபாலன்
7. சி.சிறிதரன்
8. வித்தியாதரன்



ஒகோ... அப்படியா விசயம்? அப்படியானால் சரவணபவனின் இடம்?

00



புதிய கட்சி தொடங்குவதற்கான முயற்சியில் முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர் பரபரப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பது பகிரங்கமான செய்தி. ஆனால், இவர் கட்சி தொடங்கப்போவதாக சொல்லிக்கொள்வதெல்லாம் ஏன் தெரியுமா?

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தனக்கொரு சீட்டைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தர வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுக்கவே.

இவருக்கு அந்தச் சீட்டைக் கொடுப்பதா? அல்லது பத்திரிகை முதலாளியும் எ.பியுமான இவருடைய மைத்துனருக்குக் கொடுப்பதா? என்று குழம்பிக்கொண்டிருக்கிறார் மாவை.

இப்பொழுது கிடைத்துள்ள தகவலின்படி பத்திரிகையாளர் சித்தியடைந்திருப்பதாகவும் அவருடைய மைத்துனரான முன்னாள் முதலாளி இப்பொழுது எதிராளியாகி விட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

உன் அருளால் எல்லாம் நல்லாய்த்தான் நடக்கிறது நல்லூர் முருகா...!

00

சில நாட்களுக்கு முன்பு கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் புத்தக வெளியீடு ஒன்று நடந்ததல்லவா. அந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்கு அந்தக் கட்சியின் மூத்த – முக்கிய தலைவர்களுக்கு விருப்பமே இல்லையாம். (அவர்கள் யாரும் அந்த வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை) அப்படியிருந்தும் அந்தப் புத்தகத்தை அவர் தன்னுடைய கட்சியின் நிலைப்பாடுகள், கோட்பாடுகள் எல்லாவற்றுக்கும் மாறாக ஏன் வெளியிட்டிருக் கிறார் என்றால், தன்னுடைய செல்வாக்கைக் கட்சிக்குக் காட்டவும் தன்னுடைய கல்வித்தகமையை (இந்தப் புத்தகத்தில் தன்னுடைய கல்வித் தகமையை வலு துலக்கமாகக் கொட்டை எழுத்தில் போட்டு சுமந்திரன் எம்பிக்குத் தான் சரிநிகரானவன் என்று காட்டியிருக்கிறார் சிசி எம்பி என்று அந்தக் கட்சியைச் சேர்ந்த சிலர் அந்தக் கூட்டத்திலேயே குசுகுசுத்துக் கொண்டிருந் தார்கள்) சனங்களுக்கு சொல்ல ஒரு வழியாக அது இருக்கும் என்றுதான்.

இதெல்லாம் ஏன் என்றால் அடுத்த சில மாதங்களில் வரப்போகிற பாராளுமன்றத் தேர்தலில் தனக்கான சீட்டை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தனக்கு உவப்பில்லாத வேலையைச் செய்யும் எந்தப் பெரிய கொம்பனையும் தூக்கி எறியத் தயங்கமாட்டார் என்று இந்த எம்பிக்குத் தெரியும்.

முன்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் பெரிய செல்வாக்கோடு இருந்த கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம், சிறிகாந்தா, பத்மினி போன்ற ஆட்களையே தூக்கி எறிந்த சம்பந்தன் இந்தத் தடவை யும் தன்னை மிஞ்சி ஓடுகிற ஆட்களைத் தூக்கியெறிவார் என்று கட்சிக்குள் ஒரு கிசுகிசுப்பு.

இதை மணந்து பிடித்த சிங்கன் தன்னை லேசில் தூக்கியெறிய முடியாது என்று ஒரு நிலையை உண்டாக்கத்தான் இந்தப் புத்தக வெளியீட்டை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்று கூட்டமைப்பு வட்டாரங்களில் பரவலாகக் கதைக்கப்படுகிறது. இந்தப் புத்தகத்தில் புதிசாக ஒரு சரக்கும் இல்லையெண்டாலும் ஜெனிவாத் தீர்மானத்தை வைத்து புலம்பெயர் மக்களின் ஆதரவையும் உள்ளூரில் ஒரு செல்வாக்கு மண்டலத்தையும் உண்டாக்கலாம் என்று கணக்குப் போட்டிருக்கிறார் இந்தச் சிங்கன்.



அரசியலில் குதிக்க பத்திரிகையாளர் ஒருத்தர் ஒரு புத்தகத்தையும் அதற்கான புத்தக வெளியீட்டையும் கருவியாக்குகிறார் என்றால், அரசியலில் நீடிப்பதற்கு இன்னொரு எம்பி இன்னொரு புத்தகத்தையும் புத்தக வெளியீட்டையும் கருவியாக்க முயற்சிக்கிறார்.

நல்லாய்த்தான் இருக்கு இந்த மாதிரியான ஒரு ஐடியா.

பணிவு என்பது தோரணங்களில் அல்ல. செயல்களில்தான் இருக்க வேண்டும்.
- ஆண்ட்ருமேசன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ் ஊடகங்கள் செய்வதென்ன?

எல்லாவற்றையும் தீர்மானிக்க வல்ல உலக பயங்கரவாத சக்தியாக வருணிக்கப்படும் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக் காலகட்டத்திற்குள் நாமிருக்கிறோம். அவர்கள் தரும் தகவல்களை விழுங்கி விழுங்கி அவர்கள் உருவாக்கும் அச்சுகளில் வார்த்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அறிவே ஆயுதம் என்ற நிலை மாறி இன்று தகவல்களே ஆயுதம் என்னும் நிலை வந்துவிட்டது. இந்த ஆயுதங்களை வலிமை மிகுந்ததாக கையில் வைத்திருப்போர் தான் இன்று மக்கள் சிந்தனையைத் தீர்மானிக்கிறவர்களாகவும், தங்களது இழுப்புக்கு மக்களை இழுத்துச் செல்பவர்களாகவும் உள்ளார்கள்.

தமிழ் ஊடகங்களைப் பார்ப்பவர்களுக்குத் தெரியும் ஒரே வகையான சிந்தனைப் போக்கையும் தீர்மானங்களையுமே மக்களுக்கு உரைத்து உரைத்து ஊட்டிவருகிறார்கள். எந்தவித நற்பலன்களையும் விளைவிக்காத அந்தப் போக்கில் நம் ஊடகங்கள் எந்த விமர்சனங்களையும் எழுப்புவதில்லை; எழும்ப விடுவதுமில்லை.

செய்திகள், தகவல்கள் அனைத்தும் பொறுப்புணர்வற்ற, வெறும் உணர்ச்சியூட்டி விற்பனையாக்கும் சரக்குகளாகி விட்டன. இந்தச் சரக்கு உற்பத்தியின் நோக்கம், மாற்றங்களை ஏற்படுத்துவதல்ல, பண ரீதியாகவும் அரசியல் வாய்ப்பு ரீதியாகவும் தங்கள் இலாபத்தை அதிகரிப்பது மட்டுமே.

மக்களைத் தகவலறிவு உள்ளவர்களாக்குதல், கல்வியூட்டுதல், ஆட்சியும் அதிகாரப் பிரிவும் நீதியும் மக்களுக்குரியவையாகச் செயற்படுவதைக் கண்காணித்து வழிப்படுத்துதல், மக்களின் வாழ்வுக்குத் தீங்கானவற்றைக் கண்டு வெளிப்படுத்துதலும் சரியான திசை நோக்கிச் செல்ல வேண்டிய மக்களின் குரலாக ஒலித்தலும் ஊடகங்களின் கடமை.

நமது ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பதை அவற்றின் செய்திப் பொழிதல்களுக்கு அப்பால் மக்கள் தமது சிந்தனையைத் தப்புவித்து வைத்துக்கொண்டு கொஞ்சம் ஆய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

அறுபது வருட சாதனையாக பாடழிவு ஒன்றுக்கு மக்களை இழுத்துச் சென்றதும், இன்றுவரை அந்த இழப்புகளை நிவர்த்தித்து மேலெழுவதற்கான விவேக அணுகுமுறைகளைக் காட்டுவதற்குப் பதிலாக மேலும் மேலும் அதே பழங்குடிச் சமூகத்தின் உணர்ச்சிகர மடமைக்குள் வைத்திருப்பதையே செய்துவருகின்றன.

தொடர்ச்சியாக இவ்வளவு அவலங்களைச் சுமந்து வருகிறோம். இதிலிருந்து மீள்வதற்குரிய சாத்தியமான மக்கள் நம்பக்கூடிய வழி ஏதும் இந்த ஊடகங்களால் இதுவரை எப்போதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

உணர்ச்சிகரமாக விடயங்களை அணுகும் முறை தவிர, புத்திசாலித்தனமான, தமிழ் ராஜதந்திர நகர்வில் ஒரு சிறு வெற்றியையேனும் எப்போதாவது பெற்றுக்கொள்ளும்படியான ஆலோசனைகளை இவை சொல்லியிருந்ததுண்டா?

எல்லாவற்றுக்கும் அரசியல்வாதிகளையோ ஆயுதப் போராளிகளையோ பழிசுமத்திவிட்டுத் தப்புவதைத் தவிர ஊடகங்களின் பொறுப்புணர்ச்சியை எப்போதாவது காண்பித்ததுண்டா? நடந்து முடிந்தவற்றுக்கும் நடக்கும் அவலங்களுக்கும் இந்த நான்காவது தூணின் பொறுப்பு பெரிதல்லவா!

இன்றைய தமிழ் அபிப்பிராயத்தைப் பெருமளவு வடிவமைத்துக் கொண்டிருப்பவை இந்த செல்வாக்குமிக்க ஊடகங்கள்தான். நமது மக்கள் அனுபவிக்கும் எந்தக் கஷ்டங்களையும் கடந்து செல்ல முடியாதவாறு இன்னும் நம் சிந்தனை இருந்துகொண்டிருப்பதற்கு வேறு யார் முதற் காரணமாக முடியும்?

ஊடகம் உண்மையை சொல்லவில்லை என்றால், மக்களின் உண்மை வாழ்க்கையைச் சொல்லவில்லை என்றால் அதன் நெருக்குதல்களிலிருந்து மீள்வதற்கு வேண்டிய யதார்த்தத்தை காட்டவில்லை என்றால், அது வெறும் உணர்ச்சிகளை விற்பனை செய்யும் பொழுதுபோக்காக, முதலாளிகள் லாபமீட்டும் விற்பனைப் பொருளாகவே நின்றுவிடும்.

மக்கள் விழிப்படையவும், இவற்றிடமிருந்து மீளும் வழி காணவும் வேண்டும்.

- ஆசிரியர்

# காணாமற் போனோர் குறித்த இடைக்கால அறிக்கை பூர்த்தி

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பிலும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை தயாரிப்புப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

மேற்படி அறிக்கை மார்ச் மாதம் முற்பகுதியில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. உள்ளக விசாரணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் மார்ச் 2 ஆம் திகதிவரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் மேற்படி குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போதே இடைக்கால அறிக்கையை வெளியிடுவது தொடர்பான திகதி நிர்ணயிக்கப்படும் என அறிய முடிகின்றது. மார்ச் மாதநடுப் பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு பயணங்களில் ஈடுபடவுள்ளதால் இடைக்கால அறிக்கைமார்ச்மாத முற் பகுதியில் வெளியாவதற்கான சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன.

எனினும், இது பற்றி ஜனாதிபதி செயலகம் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்கவில்லை. மேற்படி விசாரணைக்குழுவின் பதவிக்காலம் ஓகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளதால், புதிய அரசு அக்குழுவின் செயற்பாடுகளில் எத்தகைய மாற்றங்களையும் செய்யாது என ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணை நடத்தும் வகையில் இந்தக் குழுவின் விடயப்பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ள நிலையில், போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு புதியதொருகுழு அமைக்கப்படுமா? அல்லது இந்தக்குழு மேலும் பலப்படுத்தப்படுமா என்பது பற்றி இன்னமும் புதிய அரசு அறிவிக்கவில்லை. காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடாத்தும் இந்தக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டிருந்த சர்வதேச நிபுணர்கள் குழுவின் செயற்பாடுகள் மந்தமாக அமைந்துள்ளதாகவும் உரிய ஆலோசனைகள் கிடைக்கப்பெறவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, சர்வதேச ஆலோசனைக்குழுவில் மாற்றங்கள் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஐ.தே.க.அமைச்சுப் பதவிகள் தேசிய அரசில் குறைக்கப்படும்

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கப்படும்போது, அமைச்சுக்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யாது, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சு பதவிகளில் சரிபாதியை தமக்குத் தருமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக போட்டியிட்ட போது, தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோருடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் வெற்றியீட்டினால் பிரதமர் பதவியை ரணிலுக்கு வழங்கவும்,அமைச்சு பதவிகள் தலா 12 ஐ ஐக்கிய தேசியக் கட்சிக்கும், 12 ஐ சுதந்திரக் கட்சிக்கும் வழங்குவது எனவும் இணக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆறு அமைச்சுப் பதவிகளை வேறு கட்சிகளுக்கு வழங்குவது எனவும் இணங்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளன.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், அமைச்சு வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையர்களுக்கு மரண தண்டனை விடுதலைக்கான கூட்டம் தாமதம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் மூவரையும் விடுதலை செய்வது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இது குறித்து சவுதி அரேபிய அதிகாரிகளால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் பிரதிநிதியான அமைச்சர் ரவூப் ஹக்கீம் எதிர்வரும் 27 ஆம் திகதி சவுதி அரேபியாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் நேற்றையதினம் நடைபெறவிருந்த நிலையில், 27 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

எனினும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் மூவரையும் விடுதலை செய்வது தொடர்பில் சவுதி மன்னருடன் அமைச்சர் ஹக்கீம் எதிர்வரும் 27 ஆம் திகதி கலந்துரையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் பதில் வெளியிடப்படும் வரையில், இலங்கையர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படமாட்டாதென அமைச்சர் தலதா அத்துகோரள மேலும் கூறினார்.

2007 ஆம் ஆண்டு ஜேமன் பிரஜையைக்கொலை செய்தமை தொடர்பில் மூவருக்கும் சவுதி நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன், அந்தத் தண்டனை சவுதி உயர் நீதிமன்றத்தினால் அண்மையில் உறுதி செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மைத்திரி, ரணில் தலைமையில் இனவாத எதிர்ப்புப் பேரணி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இனவாதத்திற்கு எதிராக பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

நாட்டுக்குள் இனவாதத்தை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக சில தீய சக்திகள் புதிய அரசுக்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளதைத் தொடர்ந்தே இப்பேரணி முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்த எதிர்ப்பு போராட்டப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், மத அமைப்புக்கள், கலைஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் இந்தப் பேரணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

சில தரப்பினர் சில ஊடகங்களையும் இணைத்துக் கொண்டு மீண்டும் நாட்டில் இனவாதத்தை தூண்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இனவாதத்திற்கு எதிராக நடாத்தப்படவுள்ள இந்தப் போராட்டத்திற்கு ஆயத்தமாகுமாறு ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்துள்ளார்.


## வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியஅதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்செயற்பாடு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் தமது வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (18)



அ. மார்க்ஸ்

I disapprove of what you say, but I will defend to the death your right to say it.



Voltaire

# கருத்துரிமை, அதன் எல்லை மற்றும் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் ஒரு அழகிய தீர்ப்பு

முகநூல் முதலான வலைத்தளங்கள் பல தரப்பினரும் சந்திக்கும் ஒரு ஜனநாயக ஊடகம். முன் தணிக்கைகள் சாத்தியமில்லாத இந்த உலகம் ஒரு புதிய மொழியை உருவாகியுள்ளது. இது பல்வேறு சாத்தியங்களை மட்டுமன்றி சில ஆபத்துக்களையும் தன்னனகத்தே கொண்டுள்ளது. இதை எவ்வாறு எதிர்கொள்வது? கருத்துரிமைத் தடைச் சட்டங்கள் இதற்குத் தீர்வாகுமா? கருத்துரிமை குறித்து தொடர்ந்து நடைபெற்று வரும் விவாதத்தில் இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு முக்கியமான ஒன்று.

கருத்துரிமை மற்றும் கருத்துரிமையின் எல்லை ஆகியவற்றுக்கிடையேயான முரண் குறித்த விவாதம் அத்தனை எளிதாக முடிவுக்கு வரக் கூடியதல்ல. சொல்லப்போனால் அந்த விவாதம் முடிவுக்கு கொண்டு வரப்படக்கூடாது. கருத்துரிமைக்கும் அதனுடைய எல்லைக்கும் இடையேயான இழுபறி தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து.

ஒரு கருத்தை ஒருவர் வைத்துக் கொள்வது என்பது மட்டுமல்ல (Freedom of Opinion), அதை வெளிப்படுத்துவதற்கான உரிமையையும் (Freedom of Expression) உலகளாவிய ஜனநாயகப் பிரகடனங்கள் அனைத்தும் தெளிவாக்குகின்றன. ஏனெனில் ஜனநாயகம் என்பது கருத்துரிமையிலிருந்து பிரிக்க இயலாத ஒன்று. ஜனநாயகம் என்பது பெரும்பான்மையின் ஆட்சி மட்டுமல்ல, அது சிறுபான்மையினர் தம் கருத்தைப் பரப்புவதையும், அதை இயன்றளவு பெரும்பான்மை ஆக்குவதையும் உள்ளடக்கியது. ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால் மக்கள் தமது பிரச்சினைகள் குறித்து தெளிவு பெற்றிருக்க வேண்டும். எனவே அவர்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும்.

எனவே கருத்துரிமையின் இன்னொரு பக்கம் "அறிதலுக்கான உரிமையாகவும்" உள்ளது. எனவே ஒரு எழுத்தாளன் அல்லது ஊடகவியலாளனது கருத்துரிமையைப் பறிப்பதென்பது இன்னொரு பக்கம் மக்களின் அறிந்து கொள்ளும் உரிமையைப் பறித்துக் கொள்வதாகவும் ஆகிவிடுகிறது.

எனினும் கருத்துரிமையைப் பற்றிப் பேசியவர்கள் எல்லோரும் அதன் எல்லை குறித்தும் பேசாமல் இருந்ததில்லை. ஏனெனில் கருத்துக்கள் என்பன வெறுமனே ஒரு சொற்குவியல் அல்ல, அவை ஒருவரின் இருப்பின் மீது எதிர்மறையான தாக்கங்களை விளைவித்து அவரது உயிரியல் இருப்பையே அச்சுறுத்தும் வல்லமை வாய்ந்தவை. அதனால் தான் ஜனநாயகக் கோட்பாட்டிற்கான அடித் தளத்தை இட்டுச் சென்றுள்ள ஜே.எஸ். மில் போன்றோர் கருத்துரிமையின் எல்லையை "அடுத்தவருக்கு ஊறு (harm) விளைவிக்காதவரை" என வரையறுத்தனர்.

ஆனால் அடுத்தவருக்கு "ஊறு விளைவித்தல்" என்பதுவரை கருத்துரிமையை அனுமதித்துவிட முடியாது, அடுத்தவரைப் புண்படுத்துவது (offend) என்கிற அளவிற்குக் கூட அது இருந்துவிடக் கூடாது எனச் சொல்வாரும் உண்டு.

கருத்துக்கள் ஒருவரது பௌதிக இருப்பைப் பாதிப்பது என்பது பல காரணிகளைச் சார்ந்துள்ளது. யார் அந்தக் கருத்தை உதிர்க்கின்றனர்? யார் மீது அக்கருத்து உதிர்க்கப்படுகிறது? எத்தகைய ஊடகத்தின் மூலம் அது பரப்பப்படுகிறது? எவ்வளவு மக்களை அது சென்றடைகிறது? எவ்வளவு காலம் அது மக்கள் மத்தியில் நின்று பாதிப்பை விளைவிக்கிறது? என அது பல அம்சங்களைப் பொறுத்துள்ளது.

ஒரு சிறு குழுமம் படிக்கிற ஒரு சிற்றிதழில் வெளி வரும் ஒரு கருத்து ஏற்படுத்தும் தாக்கமும் ஒரு செல்வாக்குமிக்க நடிகர் நடித்துத் தயாரித்து நூறு நாட்கள் ஓடும் ஒரு திரைப்படம் ஏற்படுத்தும் ஊறும் வெவ்வேறு அளவினதாக இருக்கலாம். பாதிக்கப்படக்கூடிய மக்கள் அதைக் கண்டு கொள்ளும் பதட்டமும் வெவ்வேறு அளவினதாக இருக்கலாம்.

கருத்துப் பரவலில் ஒரு மிகப் பெரிய பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ள இணையம் முதலான ஊடகங்களில் ஆபாசமாகவும், அவதூறாகவும் எழுதப்படுபவற்றைத் தடை செய்தல் என்பது தகுமா? முகநூல், ட்விட்டர் முதலான சமூக ஊடகங்கள் கருத்துரிமையில் ஒரு புரட்சியை இன்று ஏற்படுத்தியுள்ளன, யாரும் தங்கள் கருத்தை எந்த வித தணிக்கைப் பயமும் இன்றி தோன்றும் கணத்தில் பதிவிட்டு, தேச எல்லைகளைக் கடந்து அக்கணமே பல்லாயிரக்கணக்கானோரின் கண்களில் படுபவையாக அவை மாறிவிடுகின்றன. இவையும் பல நேரங்களில் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகின்றன. ஆபாசப் படத்தை வெளியிடுதல் அல்லது அவதூறான செய்தியைப் பகிர்தல் முதலியனவும் சில எடுத்துக்காட்டுகள்.

> **வலைத்தளப் பதிவுகள் மீதான அரசுக்கட்டுப்பாடு இல்லாதது என்பது ஒரு வகையான பெருங் குழப்பத்தை (chaos) ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் வழக்கு விவாதத்தின்போது வல்லுநர் ஒருவர் சொன்னது போல, "வலைத்தளம் சாதித்த வெற்றி என்பது அதன் இந்தக் குழப்பம்தான். வலைத் தளத்தின் வலிமையே இந்தப் பெருங் குழப்பம்தான்".**

இந்த நோக்கில் அமெரிக்காவில் (Communications Decency Act (CDA)" என்றொரு சட்டம் 1996இல் இயற்றப்பட்டது. ஆபாசப் படங்கள் மற்றும் சில பாதிப்புகளை ஏற்படுத்தும் கருத்துக்களை சமூக ஊடகங்களிலும் பிறவற்றிலும் பரப்புவதை அது தடை செய்தது.

1997இல் அமெரிக்க உச்சநீதிமன்றம் ஒரு வழக்கில் (cyber law case of Reno v. ACLU) இச் சட்டத்தின் பெரும் பகுதியை அரசியல் சட்ட விரோதமானது எனச் சொல்லி ரத்து செய்தது. மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வில் நீதியரசர் ஸ்டுவர்ட் ஆர் டால்ஸெல் இது குறித்து கூறிய கருத்துக்கள் இங்கு, இன்று நம் கவனத்துக்குரியவை.

**'அச்சு முதலான இதர ஊடகங்களைக் காட்டிலும் வலைத்தளம் என்பது 'பேச்சை வளப்படுத்தும் ஒரு ஊடகம்' (speech enhancing medium). அது வலைத் தளத்தை நிச்சயமாகப் பாதிக்கும் என்கிற வகையில் மேற்படி சட்டம் வயது வந்தோருக்கு இந்த ஊடகத்தில் கிடைக்கக்கூடிய பேச்சுச் சாத்தியத்தின் அளவைக் குறைக்கிறது. இது அரசியல் சட்ட அடிப்படையில் சகித்துக் கொள்ள முடியாத ஒன்று ஆகும்.**

**வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் சில உரையாடல்கள் மரபுவழிச் சொல்லாடல்களின் எல்லைகளை மீறக் கூடியவைதான். வலைத்தள உரையாடல்கள் வடிகட்டப் படாதவை; செதுக்கிச் சீர்திருத்தப்படாதவை; வழமைகளை மீறியவை; உணர்ச்சிவயமானவை; பாலியலை வெளிப்படையாகப் பேசுபவை; ஆபாசமானவை; ஒரு வார்த்தையில் சொல்வதானால் பல சமூகங்களால் தரக்குறைவானவை எனக் கருதப்படுபவை.**

**சமூகத்தின் சகல தளங்களிலும் உள்ள குடிமக்களும் தங்கள் குரலை ஒலிக்க வாய்ப்புள்ள ஒரு ஊடகத்தில் இப்படிப் பேச்சு அமைவதை நாம் எதிர்பார்க்க வேண்டும். மீடியா மன்னர்களைப் போலவே சாதாரண மக்களுக்கும் இத்தகைய ஊடகம் அளிக்கும் இந்தச் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும்....**

**எனது இந்தப் பகுப்பாய்வு, வலைத்தள உரையாடல்களின் ஆபத்துக்களிலிருந்து குழந்தைகளை அரசு காப்பாற்றுவதற்குத் தடையாக இருந்துவிடக் கூடாது.**

**வலைத்தள ஆபாசம் மற்றும் குழந்தைகளை ஆபாசமாகக் காட்சிப்படுத்துதல் (child pornography) தொடர்பான சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அரசு இவற்றின் பாதிப்புகளிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவதைத் தொடர வேண்டும்....**

**நீதிமன்ற விவாதங்களில் சொல்லப்பட்டது போல புதிய ஊடகங்களின் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்த பொதுக் கல்வியைப் பரப்புவதும் மிகவும் அவசியமாகிறது. என்னுடைய பார்வையில், நமது இந்த நடவடிக்கையின் பொருள் என்னவெனில், வலைத்தளப் பதிவுகளின் மீதான அரசின் அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பு என்பது பாதுகாக்கப்படாத பேச்சுக்கான மரபு வழி எல்லைக் கோட்டுடன் நின்றுவிடுகிறது என்பது மட்டுமே....**

**வலைத்தளப் பதிவுகள் மீதான அரசுக்கட்டுப்பாடு இல்லாதது என்பது ஒரு வகையான பெருங் குழப்பத்தை (chaos) ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் வழக்கு விவாதத்தின்போது வல்லுநர் ஒருவர் சொன்னது போல, 'வலைத்தளம் சாதித்த வெற்றி என்பது அதன் இந்தக் குழப்பம்தான். வலைத் தளத்தின் வலிமையே இந்த பெருங் குழப்பம்தான்'.**

**வலைத்தளத்தின் வலிமை அதன் பெருங்குழப்பம்தான் என்பதுபோல, நமது (அரசியல் சட்டம் வழங்கியுள்ள) உரிமைகளின் வலிமை தடை செய்யப்படாத நமது பேச்சின் ஊடாக உருவாகும் இந்தக் குழப்பமும் கூக்குரலிலும்தான் உள்ளது....**

மிக அழகான தீர்ப்பு. ஒரு கவிதையை வாசித்த உணர்வு நமக்கு ஏற்படுகிறது. கருத்துரிமையின் ஊடாக உருவாகும் மொழி வளம், பல வகைப்பட்ட மக்கள் தொகுதிகளும் தடைகள் இன்றி முழு உரிமைகளுடன் ஒரே தளத்தில் சந்திக்கும்போது நிகழும் மொழி விசாலிப்பும், அழகிய குழப்பமும் இழக்கக் கூடியவை அல்ல. இவற்றின் மூலம் எந்த ஒரு தரப்புக்கும் ஊறு ஏற்படாமல் கண்காணிக்க வேண்டியதும் பாதுகாக்க வேண்டியதும் அரசின் கடமை.

அதைவிட இந்த ஊறுகள் குறித்த புரிதல் மற்றும் பிரக்ஞையை உருவாக்கும் பொதுக் கல்வி மிக மிக முக்கியம்.

### கொழும்பு துறைமுக நகரத்திட்டம்

# வணிகநோக்கமாக இருந்தால் இந்தியா கவலைப்படக்கூடாது

## என்கிறார் அமைச்சர் சம்பிக்க



சீனாவின் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம், இராணுவப் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படாமல், முற்றிலும் வணிக நோக்கம் கொண்டதாக இருந்தால், அது குறித்து இந்தியா கவலைப்படத் தேவையில்லையென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் நடாத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இது குறித்து விளக்கமளித்தார்.

கொழும்புத் துறைமுகமோ, துறைமுக நகரமோ, எந்தவகையான இராணுவ நடவடிக்கைக்கும் சீன அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்டால், அது இந்தியாவிலும் இலங்கையிலும் மோசமான பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

எனவே, இவை வணிக நோக்கம் மட்டும் கொண்டவை என்பதை நாம் வரையறுக்க வேண்டும்.

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள சீனாவின் கொள்கலன் இறங்குதுறைக்கு, சீன நீர்மூழ்கிகள் கடந்த ஆண்டு வருகை தந்தது, இந்தியாவுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இலங்கையிலும் வணிக செயற்பாடுகளில் இந்தியா தலையீடு செய்யக்கூடாது.

ஆனால் அது ஒரு இராணுவ விவகாரமாக இருந்தால், இரகசியமாக ஏதேனும் நடந்தால், அது பிரச்சினையாகும்.

ஆனால், வணிக ரீதியாக, கடலில் ஒரு நிலப்பகுதியை அமைப்பது இலங்கையின் உரிமை.

இலங்கை எமது வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும், பயிற்சிகளையும் கொடுத்து இந்தியாவின் இந்திரா காந்தி அரசாங்கம் இலங்கையல் குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஏனென்றால், திருகோணமலையில் கடற்படைத் தளத்தை அமெரிக்கா அமைக்கவுள்ளதாக இந்தியா அச்சம் கொண்டிருந்தது.

சீன அரச நிறுவனத்துக்குச் சொந்தமாக நிலத்தைக் கையளிக்க இணங்கும் திட்டம் தான் கவலை கொள்ள வைக்கிறது.

கடலில் இருந்து நிலத்தை அமைப்பது தொடர்பான எந்த சட்டமும் இலங்கையில் இல்லை.

இலங்கையின் ஒரு பகுதியாக உருவாக்கப்படும் நிலத்தில், அதன் சட்டங்கள் தான் இருக்க வேண்டும்.

கடுவெல பகுதியில் இருந்து. மில்லியன் கணக்கான தொன் எடையுள்ள பாறைகளை பிரித்தெடுத்தால், ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை.

மில்லியன் கணக்கான தொன் மணல் கடற்படுகையில் இருந்து அகழ்ந்தெடுககப் படுவதால் ஏற்படும், பாதிப்புக் குறித்து ஏதும் தெரியாது.

நாம் அதுபற்றி எதைச் சிந்தித்தாலும், சீனா இப்போது ஒரே வல்லரசாக உள்ளது.

அதனுடனான நிதிச் செயற்பாடுகளால் கவலை கொள்கிறோம். எமக்கு அது தெரிய வேண்டும்.

இந்த அரசியல், நிதி யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவர்கள் 60 வீதமான டொலர் கையிருப்பை வைத்துள்ளனர். நாம் சீனாவின் குறுநில அரசாகி விடக்கூடாது.

ஆனால், நாம் அவர்களிடம் இருந்து நிறையவே கற்றுக்கொள்ள வேண்டும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராணுவ ஹோட்டல்கள் விரும்பவில்லை ரணில்



இராணுவத்தினர், சுற்றுலாப் பயணிகளுக்காக ஹோட்டல்களை நடாத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை என தெரிவிக்கப் படுகிறது.

இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை பிரதமர் அனுமதிப்பார் என நினைக்கவில்லை என சுற்றுலாத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

லாயா எனும் குழும நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் இராணுவத்தினர் பல்வேறு இடங்களில் ஹோட்டல்களை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

களுத்துறை, யால, கல்குடா உள்ளிட்ட பல இடங்களில் ஹோட்டல்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கமாட்டோம்

## கூறுகிறது ஜே.வி.பி.



தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முனைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார. பொதுத் தேர்தலை நடாத்தாமல் விட எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் ஜே.வி.பி. கட்சி ஆதரவளிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். மெய்யாகவே தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டிய அவசியம் இருந்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அவ்வாறு தேசிய அரசாங்கமொன்றை அமைத்துக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் மூலம் புதிய அரசாங்கமொன்றை அமைக்கும் மக்களின் உரிமையை முடக்குவதற்கு எந்த வகையிலும் ஜே.வி.பி கட்சி ஆதரவளிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



தென் மாகாண சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் கிரிஷாந்த புஷ்பகுமார (ரத்தரங்) நேற்றையதினம் மாட்டு வண்டியொன்றில் பயணப்பட்டே சபைக்கு வந்தார். தமது சொந்த கெப் வண்டியை, ஜனாதிபதி செயலக வாகனம் எனக்கூறி அரசாங்கம் சுவீகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தாம் இவ்வாறு மாட்டு வண்டியில் வந்ததாக அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி படுகொலை சதி மேலதிக விசாரணை இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

சுதந்திரதின கொண்டாட்டங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் படுகொலை செய்யும் முயற்சி தொடர்பாக கிடைத்த தகவல் குறித்து, விசாரணை செய்யும் திட்டம் ஏதும் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 4 ஆம் நாள் நடந்த சுதந்திர நாள் அணிவகுப்பில், படுகொலை முயற்சிக்கு வாய்ப்பிருப்பதாக கிடைத்த புலனாய்வுத் தகவலை அடுத்து, பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தகவல் வெளியானது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க,

பாதுகாப்புப் படைகளில் உள்ள சிலர், ஜனாதிபதியை அல்லது சில அரசாங்கத் தலைவர்களைப் படுகொலை செய்ய தமது ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

சுதந்திர நாள் அணிவகுப்பில், இராணுவம், கடற்படை, விமானப்படை, மற்றும், காவல்துறையைச் சேர்ந்த படையினர் பங்கேற்பது வழக்கம்.

அதில் பங்கேற்கும் சிலர் இந்தப் படுகொலை முயற்சியில் ஈடுபடலாம் என்ற சந்தேகம் எழுந்திருந்தது.

அவர்களுடைய ஆயுதங்களில் ரவைகள் நிரப்பி தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கலாம் என்று நாம் சந்தேகம் கொண்டோம்.

அதையடுத்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இதுபோன்ற சம்பவங்கள் எகிப்திலும், பாகிஸ்தானிலும் இடம்பெற்றிருந்தன. எனவே, நாம் அதுபற்றி சந்தேகம் கொண்டிருந்தோம், அதனால் தயார் நிலையில் இருந்தோம்.

எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி நிகழ்வு நடந்தேறியது.

எனவே, இந்த விவகாரம் தொடர்பாக அரசாங்கம் மேலதிக விசாரணைகள் எதையும் நடத்தாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை வேண்டும்

## சிங்கப்பூர் அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்க்த்தின் ஊடாக இலங்கையில் மீண்டும் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகம் கட்டியெழுப்பப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

நம்பகத்தன்மையுடன் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையின் புதிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் இன நல்லிணக்க முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை.

புதிய அரசாங்கத்துடன் தொடர்ச்சியான உறவுகளை வலுப படுத்திக்கொள்ள சிங்கப்பூர் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக வெளிவிவகார அமைச்சர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதல் உயர்மட்ட சிங்கப்பூர் அதிகாரி சண்முகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியலில் மாற்றுக்கருத்துக்கு இடமளிக்கப்பட வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு





(கிளிநொச்சி)

ஒரு நாட்டில் ஒரு தரப்பினரின் கருத்துகளை மட்டும் கேட்டுவிட்டு, மாற்றுக் கருத்தாளர்களின் கருத்துகள் உதாசீனம் செய்யப்பட்டால் அல்லது மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிக்காது விட்டால் அந்த நாடு சர்வாதிகாரத்தை நோக்கியே பயணிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி, கோணாவில் கிழக்கு பிரதேசமக்களை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இணக்க அரசியலின் மூலம் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு நாம் ஒருபோதும் பின்னின்றதில்லை. மக்களின் தேவைகளை இனங்கண்டு, அவர்களின் பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து, அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியிருக்கின்றோம். இதன் மூலம் யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

கடந்த காலங்களில் அபிவிருத்திப் பணிகளில் இருந்து புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நகரங்களைவிட அதிகமான நிதி ஒதுக்கீடுகளின் மூலமாக நிறைவேற்றியிருக்கின்றோம். கிராமங்களின் அபிவிருத்தியின் ஒரு அங்கமாக கோணாவில் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களின் அபிவிருத்திக்காக கடந்த வருடம் 28 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவினை செலவு செய்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, கோணாவில் கிழக்கு மற்றும் விடுபட்ட ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னமும் ஒரு மாதத்திற்குள் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும். இந்த அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் எமது அரசியல் வழிமுறையின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகளே என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வைத்தியநாதன் தவநாதன், பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், இராமச்சந்திரன், கோணாவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பெ.லோகநாதன், மற்றும் மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## பாம்புகள் தொல்லை

வரணிப் பிரதேசத்தில் தற்போது பாம்புகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் அப்பகுதியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வயல் நிலங்கள் அறுவடை முடிவுற்ற நிலையில் வயல்களில் குடிகொண்டிருந்த பாம்புகள் வீடுகளுக்குள் புகுவதாகவும் கடந்த வாரம் செல்லத்துரை என்பவரது வீட்டு வளவில் சுமார் 6 அடி நீளமான பாம்பு ஒன்று பகல் வேளை அடித்துக் கொல்லப்பட்டதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். பாம்புகளின் தொல்லையால் கால்நடைகளும் அச்சத்துடன் இருப்பாதாக தெரிவிக்கப்படுகின்றது. (150)



கைதடி சமூக சேவையாளரும் பிரபல கட்டடக் கலைஞருமான அமரர் சி.இரத்தினத்தின் திருவுருவச் சிலை அண்மையில் கைதடி நவபுரத்தில் திறந்து வைக்கப்பட்டபோது... (90)

# ஈவினை மீனாட்சியம்பாளுக்கு வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈவினை - மதுரையம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சியம்பாள் திருக்கோவில் வருடாந்த உற்சவப் பெருவிழா அடுத்த மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 15 தினங்கள் இடம்பெறவுள்ளன.

தினசரி விழாக்கள் மாலை 5.30 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறுவதுடன் 15 ஆம் நாளான பங்குனி உத்தர நாளில் நிலாவரை புனித கங்கையில் தீர்த்தோற்சவமும், 16 ஆம் நாள் திருக்கல்யாண உற்சவமும், நடைபெற்று 17 ஆம் நாளில் வைரவர் சாந்தி உற்சவத்துடன் விழா நிறைவுபெறவுள்ளது.

ஆலய குரு பிரம்மஸ்ரீ சோ.குகனேஸ்வர சர்மா தலைமையில் நடைபெறும் இந்த உற்சவப் பெருவிழாவில் சாதகாசிரியர் பிரம்மஸ்ரீ ஜெ.மயூரசர்மா விசேட குருவாக கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாக் காலத்தில் விசேட சமய சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (இ)

# ஆசை அறுபது மோகம் முப்பது நாள்



"ஆயிரம் முறை போய்ச் சொல்லி ஒரு கல்யாணத்தை ஒப்பேற்று" என்ற பழமொழி "ஆயிரம் பொய்யைச் சொல்லியேனும் ஒரு கல்யாணத்தை ஒப்பேற்று" என்பதாக இப்போது எம் மத்தியில் புழக்கத்தில் இருந்து வருகிறது.

தவறான புது விளக்கம் கொடுக்கப்பட்ட இந்தப் பழ(புது)மொழி சரியோ பிழையோ, கல்யாணத்துக்காக ஆயிரம் பொய் சொல்லும் பழக்கம் நம்மவர் மத்தியில் இருப்பது என்னவோ உண்மைதானே?

"ஆயிரம் காலத்துப் பயிர்" என்று வர்ணிக்கப்படும் ஒரு கல்யாணத்தைச் செய்வதற்காக எப்படியெப்படி எல்லாமோ பல யுக்திகளைக் கையாள்வது இப்போது ஒன்றும் இரகசியமான விடயமல்லவே?

மாப்பிள்ளையைப் பற்றி பெண்பிள்ளைக்கும், பெண்பிள்ளையைப் பற்றி மாப்பிள்ளைக்கும் பல பொய்களைச் சொல்லி கல்யாணத்தை ஒப்பேற்றி வைக்கும் புறோக்கர் வியாபாரமும் இப்போது நன்றாகவே நடந்து வருகிறது.

இப்படியொரு அவசரக் கல்யாணம்தான் அண்மையில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் நடந்தேறியது என்று கொழும்பு சிங்கள ஊடகமொன்றின் பத்தி எழுத்தாளர் வர்ணிக்கிறார்.

மகிந்தவைத் தோற்கடித்து ஆட்சியை எப்படியும் கைப்பற்றியேயாக வேண்டும் என்ற தவிப்பில் இருந்த ரணில், மகிந்தவை பழிதீர்க்கவேண்டும் என்ற கொதிப்பில் இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து, மகிந்தவால் புறக்கணிக்கப்பட்டதாக மனம் புழுங்கிக்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேனவை மகிந்தவின் போட்டி வேட்பாளராக்கி வெற்றிபெறவும் செய்துவிட்டார்.

ஜனாதிபதியாக மைத்திபால சிறிசேன பதவியேற்ற அடுத்த கணமே தனக்குப் பிரதமர் பதவியையும் பெற்றுக்கொண்டு, பாராளுமன்றத்தில் சிறுபான்மைப் பலத்தைக் கொண்டிருந்த தனது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆட்சியமைப்பதிலும் அவர் வெற்றியீட்டிவிட்டார்.

100 நாட்களுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டு செய்துகொள்ளப்பட்ட இந்தத் தற்காலிகக் கல்யாணம் கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரையில் நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தது. அதற்கிடையில் சனியன் பிடித்தாற்போல் இந்த நூறு நாட்களுக்குப் பின்னர் ஆட்சியமைப்பது யார் என்ற எண்ணம் தலைக்குள் புகுந்ததாலோ என்னமோ புதுக்கல்யாணக் கிளுகிளுப்பு மெல்லக் கரைந்துபோகத் தொடங்கிவிட்டது.

பிரதமர் பதவியில் இருக்கும் ரணில், தமது கட்சி அமைச்சர்களை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் தான் நினைத்தபடியே செய்துகொண்டிருக்கிறார் என்ற புழுக்கம், பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் சுதந்திரக் கட்சிக்கு வரத் தொடங்கிவிட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும், சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் இருக்கும் மைத்திரிக்கும் இதைச் சகித்துக்கொள்வது இயலாத காரியமாகவே இருக்கிறது.

புரிந்துணர்வின் அடிப்படையில் தனக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை அடக்கியே வாசித்து வந்த ஜனாதிபதி மைத்திரி, பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ரணிலின் மருமகனாரின் கெடுபிடிகள், இராஜினாமாச் செய்யுமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கும் தனது தரப்பு அமைச்சர்களான பைசல் முஸ்தபா, ரஜீவ விஜேசிங்க போன்றவர்களின் நிலைமைகளால் இப்போது பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட்டதாக கொழும்பு அரசியல்–ஊடக வட்டாரங்களில் பேசப்படுகிறது.

போகிற போக்கில் இந்தக் கல்யாணம் எந்த வேளையிலும் விவாகரத்தில் போய் முடிந்துவிடலாம் என்ற பதற்றம் பலரது மனதிலும் இப்போது எழத் தொடங்கிவிட்டது.

ஆயிரம் பொய்யைச் சொல்லித்தான் கல்யாணம் செய்தாலும், "ஆசை அறுபது நாள் மோகம் 30 நாள்"தானே தாக்குப்பிடிக்கும்...?

எஸ்.அனசூயா

ICC CRICKET WORLD CUP 2015

## இன்றைய ஆட்டம்

**அயர்லாந்து எதிர் ஐக்கிய அரபு இராஜ்ஜியம்**

இடம்: பிறிஸ்பேன்
நேரம்: காலை 9.00 (இலங்கை நேரம்)

## நாளைய ஆட்டம்

**ஆப்கானிஸ்தான் எதிர் ஸ்கொட்லாந்து**

இடம்: டியூன்டின்
நேரம்: அதிகாலை 3.30 (இலங்கை

**இலங்கை எதிர் பங்களாதேஷ்**

இடம்: மெல்பேர்ன்
நேரம்: காலை 9.00 (இலங்கை நேரம்)

# அதிர்ந்தது அரங்கம் கெய்லின் அதிரடியால் சிம்பாப்வேயை ஆட்டம் காண வைத்தது தீவுகள்

### உலகக் கிண்ண வரலாற்றில் முதல் இரட்டைச் சதம்



(கான்பெரா)

கிறிஸ் கெய்லின் புயல்வேக துடுப்பாட்டத்தின் மூலம் சிம்பாப்வே அணியை மேற்கிந்தியத் தீவுகள் துவசம் செய்தது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டமொன்று நேற்று அவுஸ்ரேலியாவின் கான்பெராவில் நடைபெற்றது.

பி பிரிவுக்கான இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆட்டத்தின் இரண்டாவது பந்து அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. ஸ்மித் போட்டியின் இரண்டாவது பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்நிலையில் முதல் விக்கெட்டுக்காக இணைந்த சாமுவேல்ஸ் ஒரு முனையில் பொறுப்புடன் ஆட மறுமுனையில் விஸ்பரூபம் கொண்ட கிறிஸ் கெயல் அரங்கை அதிர வைக்கும் வகையில் ஆடியதுடன் பவுண்டரிகள், சிக்ஸர்கள் விளாசி அரங்கை அலங்கரித்தார். நீண்ட காலத்திற்குப் பின்னர் கெய்லின் ஆட்டம் இரசிகர்களுக்கு தீனிபோடும் வகையில் அமைந்ததுடன் பல சாதனைகளை தகர்க்க வழி வகுத்தது. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் முதல் இரட்டைச் சதம், அதிக சிக்ஸர்கள், முதல் விக்கெட்டுக்காக அதிக ஓட்டங்கள் என சாதனைகள் நீண்டது. கெய்லுக்கு பக்கபலமாக சாமுவேல்ஸும் சிறப்பாகச் செயற்பட்டு சதமடித்தார். இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 372 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 147 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டரிகள், 10 சிக்ஸர்கள் அடங்கலாக 215, சாமுவேல்ஸ் 156 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 133 ஓட்டங்களைப் பெற்றனர். முதலாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 372 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று சாதனை படைத்தது. பந்து வீச்சில் பங்யங்கர, மசகட்ச ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 373 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி முதல் விக்கெட்டை விரைவாகப் பறிகொடுத்தது. தொடர்ந்து மழை காரணமாக போட்டி சிறிது நேரம் தடைப்பட்டது.

இதன் பின்னர் இரண்டு ஓவர்கள் குறைக்கப்பட்டு 48 ஓவர்களில் 363 ஓட்டங்கள் வெற்றியிலக்காக சிம்பாப்வேக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து சளைக்காது ஆடிய சிம்பாப்வே அணிக்கு வில்லியம்ஸ், எர்வின் ஆகியோர் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தனர். இறுதியில் சிம்பாப்வே அணி 44.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வில்லியம்ஸ் ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 76, எர்வின் ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 52, ரெய்லர் 37, சிக்கிந்தர் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜே.ஈ. ரெய்லர், கோல்டர் மூன்று, கிறிஸ் கெய்ல் இரண்டு, சாமுவேல்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக கிறிஸ் கெய்ல் தெரிவு செய்யப்பட்டார்.

அயர்லாந்து அணியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்த மே.தீவுகள் அணி அடுத்தடுத்து பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகளை வீழ்த்தி தங்கள் பலத்தை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஒரே பார்வையில் போட்டி முடிவு**

**மேற்கிந்தியத்தீவுகள் 372/02 (50)**

| | | | |
|---|---|---|---|
| கிறிஸ் கெய்ல் | 215 (147) | பங்யங்கர | 1/82 |
| சாமுவேல்ஸ் | 133 (156) | மசகட்ச | 1/39 |
| ஸ்மித் | 00 (01) | 3 | |

**சிம்பாப்வே 289/10 (44.3) (48)**

| | | | |
|---|---|---|---|
| வில்லயம்ஸ் | 76 (61) | ஜே.ஈ. ரெய்லர் | 3/38 |
| எர்வின் | 52 (41) | கோல்டர் | 3/48 |
| ரெய்லர் | 37 (48) | கிறில் கெய்ல் | 2/15 |
| சிக்கிந்தர் | 26 (20) | சாமுவேல்ஸ் | 1/59 |

**73 ஓட்டங்களால் மே.தீவுகள் வெற்றி. ஆட்டநாயகன் : கிறிஸ் கெய்ல்**

# சதத்தால் உற்சாகம்; மகிழ்ச்சியில் மஹேல திளைப்பு

இந்தியாவுக்கு எதிராக 2011 உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் சதம் குவித்தபோது அடைந்த மகிழ்ச்சியைப் போன்று ஆப்கானிஸ்தானுக்கு எதிரான நடப்பு உலகக் கிண்ணப் போட்டியின்போது பெற்ற சதமும் மகிழ்ச்சி தருவதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ண இறுதி ஆட்ட சதத்தைப் போன்றே இந்த சதத்தையும் நான் வெகுவாக இரசித்தேன். மிகவும் கடுமையான நிலைமையில் எனது மனதை ஒரு நிலைப்படுத்திக்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். அது எனக்கு கைகொடுத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

போட்டியில் வெற்றிபெறும் வரை ஆடுகளத்தில் இருக்கவேண்டும் என நான் நினைத்தேன். ஆனால் துரதிஷ்டவசமாக அது கைகூடவில்லை. ஒவ்வொரு நகர்வையும் அடியையும் திடமனதுடன் செயற்படுத்தினேன். அண்மைக்காலமாக நான் ஆட்டமிழக்கும் விதம் ஏற்புடையதல்ல. அண்மைக்காலமாக நான் எனது வழமையான விளையாட்டை விளையாடுவதில்லை. ஓர் அணி மொத்த எண்ணிக்கையைத் தக்கவைக்க முயற்சிக்கும்போது மேலதிக முயற்சிகளில் இறங்குவதுண்டு.

ஆப்கானிஸ்தானும் அதனையே கடைப் பிடித்தது. நாங்களும் அதேபோன்ற உணர்வுகளை வெளிப்படுத்தி எதிரணிகளைக் கட்டுப்படுத்தவேண்டும். தனிப்பட்ட ஒவ்வொருவரும் அதற்கான முயற்சியில் இறங்கவேண்டும். இது உலகக் கிண்ணப் போட்டி. எனவே ஒவ்வொருவரும் மேலதிக முயற்சியில் ஈடுபடுவது அவசியம். நாங்கள் யாரோடு விளையாடுகின்றோம் என்பது விடயமல்ல. ஆனால் எதிரணிகளை வெற்றிகொள்வதற்கு திடமனம் கொள்ள வேண்டும். அதனை நாங்கள் இந்தப் போட்டியில் வெளிப்படுத்தினோம்.

மிகவும் கடுமையான நிலையிலிருந்து எங்களுக்கு அவற்றை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை அறிந்து வைத்துள்ளோம் எனவும் மஹேல தெரிவித்துள்ளார்.

# முறியடிக்கப்பட்ட சாதனைகள்



சிம்பாப்வே அணிக்கு எதிரான உலகக் கோப்பை லீக் போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணி அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் இரட்டைச் சதம் அடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

சதமடிக்கும் வரை நிதானித்து ஆடிய கிறிஸ் கெய்ல், அதற்குப் பின் தனது வழக்கமான அதிரடி ஆட்டத்தை ஆரம்பித்தார்.

அடுத்த 33 பந்துகளில் இரட்டை சதத்தை எட்டினார். இதில் 9 பவுண்டரிகளும், 16 சிக்ஸர்களும் அடக்கம். இரட்டைச் சதம் அடித்த பின்னர் கெய்ல் ஆடுவதற்கான சரியான வாய்ப்பு அமையாததால் மேற்கொண்டு அவர் 15 ஓட்டங்களை மட்டுமே சேர்க்க முடிந்தது. இனிங்ஸின் கடைசி பந்தில் 215 ஓட்டங்களுக்கு (147 பந்துகள், 10 பவுண்டரிகள், 16 சிக்ஸர்கள்) கெய்ல் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

உலகக் கோப்பை போட்டிகளில் அடிக்கப்படும் முதல் இரட்டைச் சதம் இது. உலகக் கோப்பையில் ஒரு வீரர் எடுத்துள்ள அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை, அதிவேகமாக அடிக்கப்பட்ட முதல் இரட்டைச் சதம் என்ற சாதனைகளையும் கெய்ல் படைத்தார்.

கெய்ல், சாமுவேல்ஸ் ஜோடி குவித்த 372 ஓட்டங்கள், ஒரு நாள் போட்டிகளில் அதிகபட்ச இணைப்பாட்டமாகும். இதற்கு முன் இந்தியாவின் ராவிட் - டெண்டுல்கர் இணைந்து எடுத்த 331 ஓட்டங்களை, அதிகபட்ச இணைப்பாட்ட சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டோனியின் பாராட்டு ரஹானேக்கு

எந்த ஒரு வரிசையில் களம் இறங்கினாலும் ரஹானேயால் சிறப்பாக ஆட முடிகிறது. ருவென்ரி-20, ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் ஆகிய 3 விதமான போட்டிகளிலும் ரஹானேயின் ஆட்டத்தில் உண்மையிலேயே மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வளைந்து கொடுக்கும் தன்மைதான் அவரது பலமாக உள்ளது. எது சொன்னாலும் அதைக் கேட்டு அப்படியே செயற்படுத்துபவர். மேலும் போட்டியின் போது பல்வேறு விதமான யோசனைகளையும் தருகிறார். அது சில சமயம் பலன் அளிக்கலாம். பலன் இல்லாமலும் போகலாம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

# மீண்டெழவேண்டும் நடுவரிசை வீரர்கள்

பெரிய போட்டிகளில் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு நல்ல பங்களிப்பை அளிக்க வேண்டியது முக்கியமானதென இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

நீண்ட நாட்களின் பின் தென்னாபிரிக்க அணி இதுபோன்ற மோசமான தோல்வியைச் சந்தித்ததை பார்த்த ஞாபகம் எனக்கில்லை. பாகிஸ்தானுக்கு எதிரான இனிங்ஸ் தவானுக்கு நல்ல நம்பிக்கையை அளித்து இருக்கும். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் தேவையான நேரத்தில் அவர் பொறுப்புடன் ஆடி சதம் அடித்தார். சுரேஷ் ரெய்னா, டோனி, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் இந்தப் போட்டித் தொடரில் ஆட்டத் திறனை மேம்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். ஓட்டக் குவிப்பில் ஹோலி, ரஹானே ஆகியோரையே இந்திய அணி அதிகம் நம்பி இருக்கிறது. இந்தப் போட்டித் தொடரில் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு நல்ல பங்களிப்பை அளிக்க வேண்டியது முக்கியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்

# வேட்கை உண்டு வேட்டையாட; காலம் உண்டு களத்தைவிட்டு அகல

(வெலிங்டன்)


சர்வதேச ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் என்னால் விளையாட முடியும் என்று இலங்கை வீரர் ரி.எம். டில்சான் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக்கிண்ணத் தொடரோடு இலங்கை அணியின் மூத்த வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளனர்.

மற்றொரு அனுபவ வீரரான ரி.எம். டில்சானும் தனது ஓய்வை அறிவிப்பார் என செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் தற்போது தனக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என்று இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்சான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடும் எண்ணம் எனக்கிருக்கிறது.



உலகக்கிண்ணத் தொடர் முடிந்த பின்னர் இது குறித்து, இலங்கை அணித் தலைவர் மற்றும் அணி நிர்வாகத்திடம் நான் கலந்துரையாடவுள்ளேன்.

அனுபவ வீரர்களான ஜெயவர்த்தன மற்றும் சங்கக்கார ஆகியோர் ஒரு நாள் தொடரிலிருந்து ஓய்வு பெறப் போகிறார்கள். எனவே, எனது அனுபவம் இலங்கையணிக்கு கைகொடுக்கும் என நான் நம்புகின்றேன்.

தற்போதைய எனது உடல் நிலை மற்றும் தகுதியை வைத்துக் கொண்டு, என்னால் இன்னும் இரண்டு, மூன்று வருடங்கள் விளையாட முடியும். எனக்கு உடற்தகுதி காணப்படாத பட்சத்தில் ஓய்வு பெற்றுவிடுவேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய விதி செய்யும் சதி; குவியும் ஓட்ட மழை

(மெல்பேர்ன்)

ஒருநாள் போட்டியில் விதிமுறை மாற்றம் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளால் உலக கோப்பை போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவிக்கப்படுவதாக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

11ஆவது உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் வரை 14 லீக் ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. இதில் 7 ஆட்டங்களில் முதலில் ஆடிய அணி 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளது. ஒரு ஆட்டம் மழையால் இரத்தானது. 6 ஆட்டங்களில் மட்டுமே 300இற்கு குறைவாக ஓட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 8 துடுப்பாட்ட வீரர்கள் சதம் விளாசியுள்ளனர்

உலக கோப்பை போட்டியில் இந்தியா- தென்னாபிரிக்கா இடையிலான லீக் ஆட்டத்தை நேரில் பார்த்த இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் டெண்டுல்கர் அதன் பின்னர் மெல்பேர்னில் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

உலக கோப்பையில் அதிக ஓட்டங்கள் குவிக்கும் ஆட்டத்தை பார்த்து வருகிறோம். இதற்கு முதல் காரணம் ஒரு நாள் போட்டி விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பது தான். வெளிப்புற பகுதியில் நிற்கும் களத்தடுப்பாளர்களில் ஒருவரை குறைத்திருப்பது ஆட்டத்தில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தி இருக்கிறது. நிலையாக அந்த இடத்தை சரிக்கட்டும் வகையில் பந்துவீச்சாளர்கள் பந்து வீசுவது கடினமான காரியாகும்.


மற்றொரு காரணம் ருவென்ரி-20 போட்டி அறிமுகம் செய்யப்பட்டிருப்பதாகும். ருவென்ரி-20 போட்டி துடுப்பாட்ட வீரர்கள் நிறைய கடினமான ஷொட்களை ஆட வழிவகுக்கிறது.



புதிய ஷொட்களை கண்டுபிடிக்க வலைப் பயிற்சியின் போது தீவிரமாக முயற்சிக்கின்றனர். புதிய ஷொட்களால் ஓட்டங்கள் அதிகம் கிடைக்கிறது.

1987ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியின் போது நான் பந்து பொறுக்கிப்போடும் (போல்போய்) பணியை செய்தேன். அன்று முதல் இன்று வரையிலான எனது கிரிக்கெட் பயணம் சிறப்பு வாய்ந்தது.

உலக கோப்பை போட்டியை ஒரு இரசிகனாக நேரில் பார்த்தது புதிய அனுபவமாகும். இந்த சூழ்நிலை அருமையானதாகும். உலக கோப்பை போட்டியின் தூதுவரான நான் நடுநிலையாக இருக்க வேண்டும். ஆனால் எனது இதயம் ஒன்றைச்சொல்கிறது. எனது மூளை இன்னொன்றைச் சொல்கிறது. எனது இதயம் சொல்கிறபடி நான் இந்திய அணிக்கு ஆதரவாக இருப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## ஏற்றம் எப்போது?

(பாரிஸ்)

சர்வதேச ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலில், ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் 4ஆவது இடத்திற்கு பின்தங்கினார்.

ரியோவில் நடைபெற்று வரும் சர்வதேச போட்டியின் அரையிறுதியில் ரபேல் நடால் இத்தாலி வீரர் போக்னியிடம் தோல்வியடைந்தார். 12 ஆண்டுகளுக்குப் பின் களிமண் ஆடுகளத்தில் அரையிறுதியில் தோற்ற நடால், நேற்று வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில் ஒரு இடத்தை இழந்தார். அத்துடன் 2013ஆம் ஆண்டுக்குப் பின் தரவரிசையில் முதல்-3 இடத்தை இழப்பது இதுவே முதல் முறையாகும்.

அவர் ஏற்கனவே இருந்த 3ஆவது இடத்தை இப்போது இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே பிடித்துள்ளார். இவர் கடைசியாக ரோட்டர்டாம் போட்டியில் காலிறுதி வரை முன்னேறியது குறிப்பிடத்தக்கது.

தரவரிசையில் நோவக் ஜோகோவிச் முதலிடத்திலும், ரோஜர் பெடரர் இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

## தப்புக் கணக்கால் எங்களுக்கு நஷ்டமில்லை



(மெல்பேர்ன்)

இந்திய அணியைப் பற்றி யாரும் தப்புக் கணக்குப் போடக் கூடாது. அப்படிப் போட்டால் அது அவர்களுக்குத் தான் நஷ்டமாகப் போகும் என இந்திய கிரிகெட் அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

மிகச் சிறந்த துடுப்பாட்டம், மிகச் சிறந்த பந்துவீச்சு, களத் தடுப்புடன் கூடியதாக இந்திய அணி விளங்குகிறது. இவர்களால் எதையும் சாதிக்க முடியும். இதை 2ஆவது முறையாக நிரூபித்துள்ளோம்.

எந்த அணியையும் சந்திக்கும் தெம்பு இந்திய அணிக்கு உள்ளது. அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தொடர் செயற்பாடு குறித்து இப்போது பேசுவது பொருத்தமல்ல. இந்தியா எப்போதுமே மோசமான அணி அல்ல. நான்கு டெஸ்ட் போட்டிகள் என்பது அதிகபட்சம். எனவே வீரர்கள் உடல் நிலையிலும் மன நிலையிலும் சோர்வடைந்திருந்தனர். இதனால் அவர்களுக்கு ஓய்வு தேவைப்பட்டது.

முத்தரப்புத் தொடரில் இந்தியா வெல்லாதது முக்கியமல்ல. இப்போது நடைபெறும் போட்டிகளை மட்டுமே பார்க்க வேண்டும் தவானின் ஆட்டத் திறன் குறித்து பலரும் கேள்வி கேட்டனர். டெஸ்ட் போட்டியில் அவருக்கு அதிர்ஷ்டம் அமையவில்லை. ஆனால் தற்போது பிரமாதமான ஆட்டத் திறனுடன் அவர் வந்து விட்டார். சிறப்பாக ஆடி வருகிறார். கப்டன் டோனியும் விரைவில் பழைய நிலைக்குத் திரும்புவார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஷபியுல்லுக்கு அடித்தது அதிர்ஷ்டம்; உலகக் கிண்ணத் தொடரில் இணைப்பு




(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அல்-அமின் ஹுசைன், அணியின் விதிமுறைகளை மீறி ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்ததால், அவர் உடனடியாக நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


பிறிஸ்பேன் விடுதியில் அணியினருடன் தங்கியிருந்த அல்-அமின் ஹுசைன் அனுமதியின்றி இரவு 10 மணிக்கு மேல் வெளியே சுற்றியுள்ளார். இது குறித்து ஊழல் தடுப்பு கழகம் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றதைத் தொடர்ந்து அவர் உலக கோப்பை அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில் அல்-அமின் ஹுசைனுக்கு பதிலாக வேகப் பந்து வீச்சாளர் ஷபியுல் இஸ்லாம் அணியில் சேர்க்கப்பட்டிருப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. 2011ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில் மஷரப் மோர்தாசா காயம் அடைந்ததால் கடைசி நேரத்தில் ஷபியுல் இஸ்லாம் அணியில் இடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இல்லற இனிங்ஸில் தங்க மகன்

(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ். (வயது-29) ஒலிம்பிக் போட்டியில் 18 தங்கம் உள்பட 22 பதக்கங்கள்



வென்று அசத்தியிருக்கிறார். இது தவிர உலக போட்டியில் பல்வேறு பதக்கங்களை வென்று குவித்துள்ளார்.

லண்டன் (2012) ஒலிம்பிக் போட்டியுடன் ஓய்வை அறிவித்த பெல்ப்ஸ் கடந்த ஆண்டு மீண்டும் களம் திரும்பினார் கடந்த ஆண்டு பான் பசிபிக் நீச்சல் போட்டியில் 3 தங்கம் வென்ற பெல்ப்ஸ் குடிபோதையில் கார் ஓட்டி பொலிஸில் சிக்கினார். இதனால் 6 மாதம் தடை விதிக்கப்பட்ட பெல்ப்ஸின் தடைக்காலம் எதிர் வரும் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது.


அதன்பின் களம் திரும்பத் திட்டமிட்டுள்ளார். இந்த நிலையில் தனது நீண்ட நாள் காதலியான விக்டோரியா அழகி பட்டம் வென்ற நிகோலே ஜோன்சனை திருமணம் செய்ய பெல்ப்ஸ் முடிவு செய்துள்ளார். இருவருக்கும் நிச்சயதார்த்தம் நேற்று முன்தினம் நடந்தது.

திருமண திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருப்பதை பெல்ப்ஸ் படத்துடன் டிவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

இந்தச் செய்தி அவரது இரசிகர்களை மகிழ்ச்சிப் படுத்தியிருப்பதாகவும், அவரின் திருமண நாளை எதிர்பார்த்திருப்பதாகவும் இரசிகர்கள் டிவிட்டரில் செய்திகளை பரிமாறி வருகின்றனர்.

# வைத்தியர், ஆசிரியரைப் போல பாராளுமன்ற உறுப்பினரும் தனது பணியைச் செய்யாது விடுவது பாரதூரமானதே!

- வீ. சிவலிங்கம் கட்டுரையிலிருந்து.



நாட்டின் தேசிய இனங்களிடையே முரண்பாடுகள் கூர்மையடைந்த நிலையில், அதனைத் தடுத்துள்ள புதிய அரசு ஊழல், லஞ்சம், சட்ட விரோத ஆட்சி, போதை வஸ்து வர்த்தகம் போன்றவற்றை ஒழிக்கப் போவதாக கூறிய போதிலும், அவ்வாறான மாற்றத்தை தற்போதைய நாடாளுமன்றால் நிறைவேற்ற முடியாது.

ஏனெனில் இவர்களில் பெரும்பாலோர் இத்தகைய ஜனநாயக விரோத நிலைக்கு காரணமானவர்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சி மட்டுமல்ல, ஐ.தே. கட்சியும் இக் குற்றங்களில் பங்காளராக உள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகளின் தோல்வி, சர்வதேச அரசுகளின் போக்குகள், மகிந்த அரசும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள அர்சியல் மாற்றங்கள் போன்றவற்றை ஆராயும்போது புதிய அரசியல் தெரிவுகளை நோக்கிச் செல்வது அவசியம் என்பதை நிலைமைகள் உணர்த்துகின்றன.

அடுத்த கட்டம் என்ன? என்ற கேள்வி எழுகிறது. இங்கு இரு அம்சங்கள் கவனத்திற்கு உரியன.

1. தற்போது தமிழ் மக்களில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றுள்ள கூட்டமைப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நிலைப்பாடு.

2. கொள்கை, கோட்பாடு, ஜனநாயக ஸ்தாபன கட்டமைப்பு போன்ற அரசியல் கட்சிக்குரிய பிரதான அம்சங்கள் எதனையும் கொண்டிராத, தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் இற்றைவரை வெளியிட்ட தனது தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதனையும் நிறைவேற்றாத, உக்கி உளுத்துப் போகும் நிலையில் உள்ள இக் கட்சியை புனரமைக்க எண்ணுவதா? அல்லது மாற்று ஏற்பாடுகளை நோக்கிச் செல்வதா? என்பதாகும்.

கூட்டமைப்பின் அரசியல் வேலைத் திட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தி குறித்த தெளிவான பார்வை இல்லை. குறிப்பாக இப் பிரதேசங்களில் பாரிய அளவில் வேலையில்லாத் திண்டாட்டம், தொழிற்சாலைகள் அற்ற நிலை, தொடர்ந்தும் விவசாயப் பொருளாதாரத்தில் மக்கள் தங்கியிருத்தல், கல்வி, சுகாதாரம் என்பவற்றில் பின்னடைவு என பல பிரச்சினைகள் உண்டு. இவை பற்றிய பிரக்ஞை நாடாளுமன்ற உறுப்பினர் பலருக்கு இல்லை.

நாடாளுமன்ற ஆட்சி முறை பல்வேறு வகைகளில் விரிவடைந்து செல்கையில் நாடாளுமன்ற உறுப்பினரும் அதற்கு ஏற்ற விதத்தில் தன்னைத் தகவமைத்துக் கொள்வது அவசியமானது. ஆனால் தனது 5 வருட நாடாளுமன்ற ஆயுட் காலத்தில் 5 நிமிடங்களாவது நாடாளுமன்றத்தில் பேசாமல் உள்ள உறுப்பினர்களும் உள்ளனர் எனில் யார் இதற்குப் பொறுப்பானவர்கள்?

வைத்திய அதிகாரி தனது கடமையைச் செய்யாது விடில் அல்லது ஆசிரியர் தனது பணியைச் செய்யாது விடில் ஏற்படக்கூடிய விளைவுகளைப் போல் இதுவும் மிகவும் பாரதூரமானது. தமது கடமையிலிருந்து தவறுகிறார்கள். கட்சிகள் தட்டிக் கேட்காவிடில் மக்களாவது கேட்க வேண்டும். ஒரு வாக்காளன் தனது வாக்கைப் பிரயோகிப்தோடு தனது பணி முடிவடைவதாக கருதும் போக்கின் விளைவுதான் இதுவாகும்.

கடந்த 70 ஆண்டுகளாக எந்தவித ஆக்கபூர்வமான மாற்றங்களும் நிகழாத ஒரு கட்சி, அரசியல் உரிமைகள் மட்டும் அல்ல பொருளாதார உரிமைகளும் படிப்படியாக இழந்த அரசியலிற்குள் மக்களை தள்ளியிருக்கிறது. இது தனி நபர்களுக்கு எதிரானது அல்ல பதிலாக சமூக மாற்றம் ஒன்றை நோக்கி விவாதத்தை நகர்த்துவதற்கு இவை தேவையாகின்றன.

கூட்டமைப்பிலுள்ள அரசியல்வாதிகள், ஸ்தாபனக் கட்டமைப்புகள், தீர்மானம் எடுக்கும் முறை என்பன மிகவும் ஜனநாயக விரோதமானதும் பிற்போக்கானதுமாகும். 30 ஆண்டுகால போர் காரணமாக ஒரு சந்ததியினர் தமது வாழ்வைத் தொலைத்துள்ளனர். இது பெரும் கொடுமையானது. அழகிய மலர்களின் வாசனையை நுகராமல் தவறியவர்கள். இவ்வாறான ஓர் சந்ததி உருவாக்கம் எதிர்காலத்தில் வரக்கூடாது என இக் கட்சிகள் சிந்தித்ததுண்டா?

இப் பிரச்சினைகளுக்கு வெளியில் நின்று வாழ்க்கையின் சுகபோகத்தை அனுபவித்தவர்கள் மீண்டும் குட்டையைக் குழப்பி அரசியல் செய்ய விழைவதை எந்த விதத்தில் அனுமதிக்க முடியும்? கூட்டமைப்பினால் இவற்றிற்கெதிராக செயற்பட முடியவில்லை.

தமிழ் அரசியல்வாதிகளில் பலர் எதிரணி அரசியலிற்குள் வாழ்ந்த போதும் சொத்துக்களைக் குவித்துள்ளார்களே! இது எவ்வாறு சாத்தியமானது? மக்களைத் துன்பத்திற்குள் தள்ளும் முடிவுகளை எடுத்தவர்கள் எவ்வாறு செல்வத்தைச் சேகரிக்க முடிந்தது?

போரின் காரணமாக சமூகம் முன்னரை விட மிக மோசமான நிலையில் உள்ளது. பரம்பரைத் தொழில்கள் போர் காரணமாக அழிந்து விட்டன. விவசாயம், மீன்பிடி என்பனவும் படிப்படியாக தேய்ந்து வருகிறது. இந்த மக்கள் கூலித் தொழிலாளிகளாக அன்றாட உழைப்பில் வாழ்பவர்களாக உள்ளார்கள். பெண்களே குடும்பத் தலைவிகளாகவும், விதவைகள் அதிகரித்தும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வு கேள்விக்குரியதாகவும் உள்ளது.

இதனால் எதிர்காலச் சந்ததியினர் கல்வி, சுகாதாரம், போஷாக்குள்ள உணவு போன்றவற்றை இழந்துள்ளார்கள். புலம்பெயர்ந்தோரின் உதவிகளைப் பெறுவோர் அந்த வருமானங்களின் மூலம் மேலும் செல்வத்தை அதிகரிக்கும் வகையிலான முதலீட்டு ஏற்பாடுகள் இல்லாமையால் முழு வருமானத்தையும் ஆடம்பர செலவுகளுக்கு பயன்படுத்துகின்றனர். அதாவது நுகர்ச்சிக்காக மட்டுமே செலவிடுகின்றனர். இதனால் உல்லாச விடுதிகள், மதுபானக் கடைகள், சமூக விரோத செயல்கள் அதிகரித்துள்ளன.

பணம் கிடைக்கும்போது அதனை மூலதனமாகப் பயன்படுத்தி சுய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு ஒரு சமூகம் முயற்சிக்காவிடில் புலம்பெயர்ந்தோரின் உதவிகள் வற்றும்போது இதைவிட மோசமாக பாதிக்கப்படப் போகிறார்கள். இதனை உணர்ந்து செயற்பட வேண்டியவர்கள், மாற்று ஏற்பாடுகளை முன் மொழிய வேண்டியவர்கள் யார்? அரசியல்வாதிகள் அல்லவா?

மேற்குறித்த பிரச்சினைகளை மையமாகக் கொண்டு பார்க்கையில் தமிழ் அரசியல் தலைமைகளால் இவற்றின் தாற்பரியங்களைப் புரிந்து கொள்ள திறனற்றதாக உள்ளது என்ற முடிவுக்கே வர முடியும். அதற்கான ஆற்றலோ, அணுகுமுறைகளோ இல்லை எனலாம்.

அரசியல்வாதிகளால் இவற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மாற்றத்திற்கும் தடையாக உள்ளார்கள் எனில் அதனைக் கையில் எடுப்பது சமூகத்தில் உள்ள ஆற்றலுள்ள புத்தி ஜீவிகள், புரட்சிகர சிந்தனையாளர்கள், இளைஞர்கள், யுவதிகளின் பொறுப்பாகிறது.

மாற்றம் சிங்களப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ் அரசியலையும் சுத்தப்படுத்துவதற்கான தேவை எழுந்துள்ளது. எனவே புதிய சமூக மாற்ற சிந்தனைகளோடு, பலமான கனதியான கொள்கைகளுடனும், [illegible]களுடனும் ஓர் மாற்று சுயாதீன அணியை உருவாக்க முன்வர வேண்டும். இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்த புலம்பெயர் நாடுகளில் வாழும் ஜனநாயக சக்திகள் பக்கபலமாக இருப்பார்களாயின் தமிழ் அரசியலில் புதிய சகாப்தம் உருவாவது சாத்தியமே.

# மீசை இருப்பவர்கள் ராவணன் வாரிசுகளா?

- சாருநிவேதிதா -



எனக்கு பால்கியின் முதல் படமான சீனி கம் மிகவும் பிடித்தது. ஏனென்றால், அதன் கதையோடு நம்மால் ஒன்றிக் கொள்ள முடிந்தது. ஆனால் அவருடைய அடுத்த படமான “பா” ஒரு கேலிக் கூத்து (Gimmick). இப்போதைய “ஷமிதாப்” பால்கியின் கேலிக் கூத்தின் உச்சம். இதை விட மோசமாக அமிதாப் பச்சனை அவமதிக்க முடியாது. என் வருத்தமும் ஆச்சரியமும் என்னவென்றால், இந்தப் படத்துக்குக் கிடைத்த ஆரவாரமான வரவேற்பு. மக்களிடையே மொண்ணையான ரசனை மேலோங்கி விட்டதையே இது காட்டுகிறது. எல்லோரும் டிவி சீரியல் பார்த்துப் பார்த்து அதையே சினிமாவிலும் எதிர்பார்க்கிறார்கள். பொதுமக்களின் அசட்டு சீரியல் ரசனைக்கு பால்கியும் ஷமிதாப்-இல் நல்ல தீனி போட்டிருக்கிறார். இவ்வளவுக்கும் நான் அமிதாப்பின் தீவிர விசிறி. இந்தியாவிலேயே அவர் அளவுக்கு நடிக்க ஆளே இல்லை என்று எழுதியிருக்கிறேன். ஆனால் தரமான சினிமா என்ற ஒன்று இருக்கிறதே? ஷமிதாப் - டிவி சீரியலில் அமிதாபைப் பார்ப்பது போல் இருக்கிறது.

தனுஷும் நானா படேகர், அதுல் குல்கர்னியைப் போன்ற ஒரு வலுவான நடிகர். இரண்டு பேரையுமே ஷமிதாப்-இல் கோமாளிகளைப் போல் ஆக்கி விட்டார் பால்கி. அமிதாபின் உச்ச பட்ச நடிப்புக்கு The Last Lear பார்க்க வேண்டும். படம் என்றால் அது படம்.

தென்னிந்தியாவில் ரசிகர்களுக்குப் பிடித்த நடிகர்களுக்குக் கட் அவுட் வைத்து பால் அபிஷேகம், பியர் அபிஷேகம் செய்வது வழக்கம். ஷமிதாப் அதற்கு எந்த விதத்திலும் சளைத்ததாக இல்லை. தமிழர்களின் சினிமா ரசனைக்கு ஏற்கனவே பாலிவுட்டில் “நல்ல” பெயர். ஷமிதாப் அதை இன்னும் வலுப்படுத்துகிறது. அமிதாப், இளையராஜா இரசிகரான பால்கி இப்படியே தமிழ் சினிமா ரசனையிலிருந்து இம்மியளவு கூட வெளியே வராமால் ரசிக மனோபாவத்திலேயே இரண்டு பேரையும் ரவுண்டு கட்டி அடித்தால் அவரிடமிருந்து நல்ல படம் வருவதற்கான வாய்ப்பே இல்லை என்று தோன்றுகிறது.

தமிழ் சினிமாவிலிருந்து நடிகைகள் பொலிவுட் சென்றிருக்கிறார்கள். ஆனால் நடிகர்களால் முடியவில்லை. கமல், ரஜினியாலும் கூட சாத்தியப்படவில்லை. ஆனால் இசையிலும் இயக்கத்திலும் சாத்தியமாயிற்று. இந்த நிலையில் தனுஷ் இந்தி சினிமாவில் நுழைவதை இந்தி மற்றும் தமிழ் சினிமா உலகமே சற்று ஆர்வத்துடன் தான் கவனித்தது. ஆனால் அவருடைய முதல் இந்திப் படம் ராஞ்சனாவும் சரி, இப்போதைய ஷமிதாபும் சரி, அவரை இந்தியில் நிலைக்க வைப்பதற்கான படங்களாக இல்லை. இது போல் இன்னும் இரண்டு படங்கள் பண்ணலாம். அவ்வளவுதான்.

வட இந்திய சினிமா இரசிகர்களுக்கு ஏன் தென்னிந்திய ஆண்கள் பிடிக்கவில்லை என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. மீசை இருப்பதால் ராவணன் வாரிசாகப் பார்க்கிறார்களோ என்னவோ! அப்படிப் பார்த்தால் அது இனவாதம்தான்.

# அறிக்கை தாமதம்: என்ன பயன்?

**- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.**



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை தாமதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கம் அப்பேரவையிடம் விடுத்த கோரிக்கையை பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இது இலங்கை அரசாங்கம் பெற்ற மாபெரும் வெற்றியாகும் என வெளியுறவுத்துறை பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா கூறியிருக்கிறார். ஆனால், அது எவ்வாறு நாட்டுக்கு வெற்றியாகப் போகிறது என்பது தெளிவாகவில்லை.

மேற்படி குழு, அந்த விசாரணையை ஏற்கெனவே நடத்தியிருந்தால் அதேவேளை அந்த விசாரணையின் அறிக்கை, அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமை பேரவையின் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படும் நிலையில் இருந்தால்' அதனை இரத்துச் செய்விக்க இலங்கை அரசாங்கத்தால் முடியாமல் போகும். செய்ய முடிந்தது அதனை பேரவையில் சமர்ப்பிப்பதை தாமதப்படுத்திக் கொள்வது மட்டுமே.

அதனைத் தான் இப்போது அரசாங்கம் செய்து கொண்டுள்ளது. அது ஒரு வெற்றியோ அல்லது தோல்வியோ அல்ல. ஏனெனில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நாள் ஒத்திவைக்கப்பட்ட போதிலும் அறிக்கையின் உள்ளடக்கம் அதனால் மாறப் போவதில்லை. உள்ளடக்கம் என்னவென்று இன்னமும் இலங்கையில் எவருக்கும் தெரியாது. அவ்வாறிருக்க அறிக்கையின் தாமதம் வெற்றியாவது எவ்வாறு?

இது ஒரு வழக்கின் தீர்ப்பை தாமதப்படுத்திக் கொண்டதற்கு சமமாகும். தாமதமானாலும் தீர்ப்பு மாறப்போவதில்லை. ஒன்றில் பிரதிவாதி குற்றவாளியாவார். அல்லது நிரபராதியாக விடுதலை செய்யப்படுவார். எனவே தீர்ப்பு தாமதமாவதில் எவ்விதப் பயனும் இல்லை. தாம் எதிர்பார்க்கும் தீர்ப்பை பெற்றுக் கொள்ள முடியுமானால் மட்டுமே அது வெற்றியாகும்.

இந்த அறிக்கை தாமதமாவது இலங்கைக்கு பாதகமாக அமையும் என ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக்க கூறியிருக்கிறார். அறிக்கை தாமதமானதால் அது அடுத்த முறை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் வரையிலான காலத்திலும் இலங்கைக்கு எதிராக சாட்சியங்கள் சேகரிக்கப்படும் என அவர் வாதிட்டு இருக்கிறார்.

எவ்வாறாயினும் அறிக்கையை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிப்பதை தாமதப்படுத்திக் கொள்வதால் அரசாங்கம் என்ன எதிர்பார்க்கிறது என்பது தெளிவில்லை. சிலவேளை அரசாங்கத்தின் 100 நாட்கள் முடிவடைந்து அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரை அதனை தாமதப்படுத்திக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம்.

ஏனெனில் தேர்தலுக்கு முன்னர் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மூலம் முன்னாள் அரசாங்கத்தில் சில தலைவர்களும் இராணுவ அதிகாரிகளும் குற்றச்சாட்டப்பட்டு இருந்தால் அவர்கள் மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்படும். அவர்கள், தென் பகுதியில் மக்கள் மத்தியில் வீரர்களாக மாறிவிடுவார்கள். அவர்களுக்காக பரிந்து பேசும் அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்படும்.

இது பொதுத் தேர்தலின் போது அரசாங்கத்தை பாதிக்கலாம். எனவே தான் அரசாங்கம் இந்த அறிக்கையை தாமதப்படுத்துமாறு மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது என்று ஊகிக்கலாம்.

போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றி உள்ளக விசாரணை. பொறிமுறையொன்றை உருவாக்குவதாக வாக்குறுதியளித்தே அரசாங்கம் ஐ.நா. அறிக்கையை தாமதப்படுத்தக் கோரியிருக்கிறது. அதற்காக கால அவகாசமும் கேட்டுள்ளது. ஆனால், அந்த உள்ளக பொறிமுறையானது காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு மூலமாக ராஜபக்' அரசாங்கம் ஆரம்பித்த பொறிமுறையே தானா அல்லது புதிய ஒன்றா என்பது தெளிவில்லை.

ஐ.நா. அறிக்கை தாமதப்படுத்தப்பட்டதனால் இலங்கைக்கு கிடைத்த வெற்றி எதுவும் இல்லையாயினும் அது உள்நாட்டில் தமிழ் தலைவர்களை அதிருப்தியடையச் செய்துள்ளது. அதாவது அரசாங்கம் தென்பகுதியை திருப்திப்படுத்தினால் வட பகுதி அதிருப்தியடைகிறது. வட பகுதி திருப்தியடைந்தால் தென் பகுதி அதிருப்தியடைகிறது. அதாவது எந்தப் பொறிமுறை வந்தாலும் வராவிட்டாலும் அரசாங்கத்துக்கு அது பொறியாகவே அமைகிறது.

# ரொமான்ஸ் ஜோடி!



ஹொலிவுட்டின் பிரபல நடிகர் ஜஸ்டின் டிம்பர்லேக். இவரின் மனைவி ஜெசிகா பைலும் பிரபல நடிகை தான். இவர்களுக்கு, "ரொமான்ஸ் ஜோடி" என, ஹொலிவுட்டில் செல்லப் பெயர் உண்டு. இவர்கள், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்றால், கை, கால், உதடுகளை வைத்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். அக்கம் பக்கம் பற்றி கவலைப்படாமல், காதல் சேட்டைகள் செய்ய ஆரம்பித்து விடுவர். கர்ப்பமாக இருக்கும் ஜெசிகா வயிற்றில், முத்தமிடுவது போன்ற புகைப்படத்தை, சமீபத்தில் சமூக வலைத் தளங்களில் வெளியிட்டுள்ளார், ஜஸ்டின். குறும்புக்கார கணவராக இருந்த ஜஸ்டின், இனி, குறும்புக்கார அப்பாவாகப் போகிறார்.

# பிச்சை எடுக்கும் சிறுவரைக் கொல்!

வளர்ந்து வரும் நாடுகள் அனைத்திலும், தெருவில் அலையும் அனாதை பிச்சைக்காரக் குழந்தைகள் இருந்து வருகிறார்கள். இவ்வகை குழந்தைகள், பஸ் நிலையங்களில், புறப்படக் காத்திருக்கும் பஸ்களில் அமர்ந்திருக்கும் பயணிகளிடம், அச்சிடப்பட்ட சீட்டு ஒன்றை மடியில் வைத்துக் கொண்டே சென்று, பின், திரும்பி வந்து, வாயைத் திறந்து உள் நாக்கைக் காட்டி, தமக்கு நாக்கு இல்லை என்றும், தாங்கள் அனாதை என்றும் கூறி பிச்சை கேட்பர்.

இது போன்று பிச்சை கேட்டு வரும் சிறுவர்களில், 90 சதவீதம் பேர், பிற்காலத்தில் ஏதோ ஒரு நியாயமான வேலையைத் தேடி, வாழ்க்கையைத் தொடர்கின்றனர். மீதமுள்ள, 10 சதவீதத்தினர், "கிரிமினல்"களாக, அடியாட்களாக, திருடர்களாக, கொள்ளைக்காரர்களாக, போதைமருந்துகள் விற்பவர்களாக மாறி விடுகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமே இந்தப் பிரச்சினை இருப்பதாக எண்ண வேண்டாம். அமெரிக்காவில் சில மாநிலங்களில் கூட இப்பிரச்னை உள்ளது. குறிப்பாக, நியூயோர்க் மாநிலம், குயின்ஸ் மாவட்டத்தில், சிக்னலுக்காக காரில் நிற்கும் போது சில சிறுவர்கள் கையில் துணியுடன் ஓடிவந்து, கார் கண்ணாடிகளை வேக வேகமாகத் துடைப்பர். பச்சை வண்ணம் சிக்னலில் விழுந்து, நீங்கள் வண்டியைக் கிளப்பும் முன், .அவர்களுக்கு காசு கொடுத்தாக வேண்டும் இல்லையேல், கூர்மையான ஆணியைக் கையில் வைத்திருப்பர். அதை கொண்டு, "சர்" என, காரில் கோடு கிழித்து விடுவர்.

ஒரு டொலருக்கு கஞ்சப்பட்டு, 100 டொலர் செலவு செய்ய வேண்டியதாகி விடும்.

இந்தப் பிரச்சினை, தென் அமெரிக்க நாடான பிரேசிலில் தலை விரித்து ஆடுகிறது. அங்கு, சிறுவர்கள், கத்தியைக் கையில் வைத்துக் கொண்டு அலைகின்றனர்; இன்னும் சில சிறுவர்கள், துப்பாக்கிகூட வைத்திருக்கின்றனர்.

இவர்கள் சகல விதமான வழிப்பறிகளிலும் ஈடுபடுகின்றனர். வழிப்பறியின் போது, எதிர்ப்பவர்களை கத்தியால் கிழித்து காயப்படுத்தவோ, துப்பாக்கியால் சுட்டோ கொன்று விடுகின்றனர்.

பிரேசில் நாட்டு அரசாலும், பொலிசாராலும் இந்த அராஜகத்தை ஒடுக்க முடியவில்லை. நிலைமை இப்படியே போனால், பின்னாளில் தமக்கும், தம் தொழிலுக்கும், நாட்டுக்குமே ஆபத்தாகி விடும் என எண்ணிய பல தொழிலதிபர்கள், கொடூரமான புது முயற்சியில் இறங்கி உள்ளனர்.

அது, இந்தத் தெருக்குழந்தைகளை, "ஒழித்து"க் கட்டுவது! இரவு நேரத்தில் குண்டர் படையை வானில் அனுப்பி, தெருவில் சுற்றிக் கொண்டிருக்கும் சிறுவர்கள், பாதை ஓரம் தூங்கிக் கொண்டிருக்கும் சிறுவர்களைப் பிடித்து வானில் ஏற்றி, ஆள் நடமாட்டம் இல்லாத இடத்திற்கு கொண்டு சென்று, சிறுவனை கீழே இறக்கி, நான்கு பேர் சிறுவனின் கை கால்களை பிடித்துக் கொள்ள, ஒருவன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்கிறான்.

குண்டர்களில் ஒருவன், "இதுவரை, 185 சிறுவர்களை நானே கொன்றுள்ளேன் இவர்கள் எம் நாட்டின் சுமைகள், எதிர்கால ரவுடிகள். இதற்கு முன், பொலிஸ் வேலையில் இருந்தேன். என் தாய் நாடு உருப்படாமல் போவதை பொலிஸ் துறையில் இருந்து, தடுக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். இப்போதைய என் முதலாளியின் எண்ண ஓட்டம் எனக்கும் பிடித்திருக்கிறது. அவரது ஆலோசனைப்படி, சிறுவர்களை சுட்டுக் கொல்கிறேன். ஒரு சிறுவனைத் தீர்த்துக் கட்டினால், எங்களுக்கு, 15 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை பணமும் கொடுக்கின்றனர்..." என,பேட்டியும் கொடுத்துள்ளான்.

**எங்கு போகிறது உலகம்?**



# சைவப்புலவர் பரீட்சைகள்

# மே மாதம் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)


அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் வருடாந் தம் நடாத்தப்பட்டு வரும் இளஞ்சைவப்புலவர், சைவப்புல வர் பரீட்சைகளில் இவ்வருடத் திற்கான பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 1 (வெள்ளிக்கிழமை) ஆம் 2 (சனிக்கிழமை) ஆம் 4 ஆம் (திங்கட்கிழமை) திகதி களில் யாழ்ப்பாணம், மட்டக்க ளப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் இடம்பெற வுள்ளதாக அகில இலங்கை சைவப்புலர் சங்கத்தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம் பந்தபிள்ளை அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைவப்புலவர் பரீட்சைக்கு 124 பரீட்சார்த்திகளும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்கு 167 பரீட்சார்த்திகளும் தோற்றவுள் ளனர். இப் பரீட்சைகளுக்கு கொழும்பு மாவட் டத்திற்கு சைவப்புலவர் சு.செல் லத்துரை மட்டக்களப்பு மாவட் டத்திற்கு சைவப்புலவர் ச.தில்லை நாதன் திருகோணமலை மாவட்டத் திற்கு சைவப்புலவர் க.பரசுரா மன் யாழ்ப்பாண மாவட்டதிற்கு சைவப்புலவர் மு.திரு ஞானசம் பந்த்பிள்ளை ஆகியோர் பொறுப் பாக செயற்படவுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் பரீட் சார்த்திகள் விண்ணப்பித்த மாவட டங்களில் இடம்பெற்றுவ்ருகின் றன.

ஆர்வமுடையவர்கள் இணைந்த கற்கை நெறியினை தொடரமுடி யும். இப்பரீட்சை சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் இல. 153 கே.கே. எஸ். வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு தபால் மூலமும் 0212223458 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு தகவல்களினைப் பெற் றுக்கொள்ள முடியும் என்று அவர் அறிவித்துள்ளார். (63)



மீள்குடியேறி அடிப்படை வசதிகளின்றி இயங்கும் மன்னார் முசலி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட காயாக்குழி யுதேயி நகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப் பினர் சட்டத்தரணி ஹூனைஸ் பாருக் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து குறித்த சாதனங்களை கையளித்தார். (160)

## உழவு இயந்திரங்களின் சேவைக்கு கூடிய வாடகை

### பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை



இந்திய அரசினால் விவசாயி களுக்காக இலவசமாக உழவு இயந்திரங்கள் முல்லைத்தீவு கமத் தொழில் சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற் றின் சேவைக்காக அறவிடப்படும் வாடகை அதிகரித்து காணப்படுவ தாகவும் இந்த நீதியற்ற வாடகையை பெறும் கமத்தொழில் சேவை நிலையங்களின் செயற்பாடுகளை பரிசீலனை செய்ய வேண்டும் என வடமாகாண விவசாய அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

இந்த உழவு இயந்திர சேவைக்காக முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள கமநல சேவை நிலையங்களினால் ஒரு ஏக்கருக்கு 2,800 ரூபா அறிவிடப்படுகின்றது. இதேவேளை தனியாரது உழவு இயந்திரங்களுக்கு 2,200 ரூபா அறவிடப்படுகின்றது.

எனவே இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களை தடுத்து ஒரு ஏக்கருக்கு 1,500 ரூபா உழவுச் சேவைக்கு கமநல சேவை நிலை யங்கள் அறவிட விவசாயத் திணைக்களத்துடன் பேசி தீர்வை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்குமாறு வடமாகாண பிரதி பேரவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் கோரியுள்ளார்.(இ)

## கர்நாடக இசைவிழா

(யாழ்.நிருபர்)

இந்திய கலாசார நிலையம் வழங்கும் ஸ்ரீ தியாகராஜ ஆரா தனை கர்நாடக இசை விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஏனைய மாகாண கலைஞர்கள் மற்றும் ஆசிரி யர்கள் உட்படப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வுக் கான ஒத்திகைகள் இன்றும் நாளையும் மாலை 4 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (10)

## பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் நன்மை கருதி பருத்தித்துறை - யாழ்ப்பாணம் (மண்டான் ஊடாக) பாதை இலக்கம் - 750 பேருந்துச் சேவை இடம்பெற்று வருகின்றது.

பருத்தித்துறையில் இருந்து காலை 5 மணிக்கும், மு.ப. 10.30 மணிக்கும் புறப்படும் பேருந் துகள் குஞ்சர் கடை, மண்டான் சந்தி வல்வை ஊடாக யாழ்ப் பாணம் வந்தடையும், இதே வேளை காரைநகரிலிருந்து புறப்படும் பேருந்துகள் செவ் வாய்க்கிழமையும், வெள்ளிக் கிழமையும் காரைநகர் சிவன் கோவில் சென்று யாழ்ப்பாணம் சென்ற டையும்.

அதேபோல் யாழ்ப்பாணத் திலிருந்து காரைநகர் நோக்கிப் புறப்படும் பேருந்துகள் மேற் படி பாதை ஊடாகவே சேவை மேற்கொள்ளும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

26.02.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




ஐ.நா. அறிக்கை
கூட்டமைப்பு அரசு
பலப்பரீட்சை

- வன்முறைகளால் சீரழியும் இளம் தலைமுறை!
- ஐ.எஸ்.ஐ.எஸ். அட்டூழியம்
- கூட்டமைப்பின் இன்றைய நிலையும் விமர்சனங்களும்
- இனவாத அரசியலை கிழக்கில் இருந்து அகற்ற அறைகூவல்

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# வடக்குமாகாண சிறந்த நூற்பரிசு
# தேர்வுப்போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாவருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கமாக போட்டிகளை நடாத்தி வருகின்றது. அந்த வகையில் இம்முறையும் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இப்போட்டிகளுக்கான நிபந்தனைகள் வருமாறு,

நூல்கள் யாவும் 2014 ஜனவரி 01ஆம் திகதிக்கும் 2014 டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும், நூலாசிரியர் வடக்கு மாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினைப் பிறப்பிடமாகக் கொண்டவராக அல்லது வடமாகாணத்தில் 10 வருடங்கள் வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும் (யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி) நூலின் 04 பிரதிகளை திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும் பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர், தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தை சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார் என்பதை கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அந்தவகையில் அறிவியல், நாவல், சமூகவிஞ்ஞானம், நாடகம், ஆய்வுநூல், குழந்தை இலக்கியம், திறனாய்வு, சிறுவர் இலக்கியம், சமயம், நாட்டார் இலக்கியம், வரலாறு, சிறுகதை, மரபுக்கவிதை, மொழிபெயர்ப்பு, புதுக்கவிதை ஏனையவை ஆகிய துறைகளில் போட்டிகள் நடைபெறவுள்ளது.

நூல் ISBN முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதாக இருத்தல் வேண்டும், மொழிபெயர்ப்பு (மொழிபெயர்ப்பு நூல்கள் யாவும் தமிழ் மொழியிலிருந்து ஏனைய மொழியிலும் ஏனைய மொழியிலிருந்து தமிழ் மொழியிலும் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். தவிர்ந்த ஏனைய நூல்கள் தமிழ்மொழி மூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் போட்டியாளர்கள் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்ப படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து நூல்களைப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்க முடியும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், செம்மணி வீதி நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. போட்டிக்காக அனுப்பி வைக்கப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது மேலதிக விபரங்களுக்கு 021 2054105 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ள முடியும் என திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டுப்படுத்தப்பட்ட பேருந்து சேவைகள்
# போக்குவரத்தில் மக்கள் அவலம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் அரச, தனியார் பேருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பிரதேசத்தை அண்டிய கிராமமக்கள் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தை அண்டி கிராமஅலுவலர் பிரிவுகள் காணப்படுகின்ற நிலையில், இக்கிராமங்களைச் சேர்ந்த மக்களின் போக்குவரத்து தேவைக்காக இங்கு நான்கு பேருந்துகளே சேவையாற்றி வருவதாகவும் இச்சேவைகளும் ஒரு சீரற்ற நிலையில் காணப்படுவதாகவும் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கிராமங்களில் வெளியிடங்களில் கூலிவேலை செய்வோர் அரச அலுவலர்கள பாடசாலை மாணவர்கள் எனப்பலர் நாளாந்தம் பேருந்துப் போக்குவரத்து சேவையில் சொல்லொணா கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைகள் இடம்பெறுவது ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் சேவையிலீடுபடும் அரச தனியார் பேருந்து களும் சீரற்ற முறையில் சேவை யில் ஈடுபடுவதால் தாம் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் குறிப்பாக நேர ஒழுங்குகள் கடைப்பிடிக்காமையால் சில சந்தர்ப்பங்களில் பேருந்தை தவறவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கிராமங்களில் மக்களின் போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு இப்பகுதிக்கு மேலதிகமான பேருந்து சேவையை வழங்குவதற்கும் இடம் பெற்று வரும் பேருந்து சேவையை சீரான முறையில் நடைபெறுவதற்கும் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் (67)

# தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தேசியஆள்அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள், அட்டை இல்லாதவர்கள், பழுதடைந்த அட்டை வைத்திருப்பவர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தத்தமது பிரிவு கிராமஅலுவலரைத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன்படி 16 வயது பூர்த்தியாகியும் இதுவரை அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் அட்டையை தொலைத்துவிட்டு இதுவரை காலமும் பிரதித்தேசியஆள் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள், அட்டையில் எழுத்து தெளிவின்மை, முகம்தெளிவின்மை, சிதைவடைந்த பழைய கால தோற்றத்தில் உள்ள முகம் போன்ற நிலையில் அட்டையை வைத்திருப்போர் பெயர் மாற்றம் செய்ய வேண்டியவர்கள் தவறாது தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்டவர்களுக்கு தேசியஅடையாள அட்டையை பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே தரவுகள் சேகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (18)



கிளிநொச்சி மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது. (90)

# ஆயுர் வேதம்
## இரத்த மூலத்தைக் குணப்படுத்தும் சிலவழிகள்!



இரத்தம் மலத்துடன் வெளியேறுவது வாயு மற்றும் கபதோஷங்களின் சேர்க்கையினால் ஏற்படக்கூடும் என்றும், பித்தத்தினுடைய சீற்றத் தாலும், இரத்தம் கெடுவதால் இரத்த மூலம் ஏற்படலாம் என்றும் ஆயுர் வேதம் குறிப்பிடுகிறது.

வறட்சி தரும் உணவினுடைய சேர்க்கை, எண்ணெய்ப்பசை உடலுக்குக் கேடு தருமோ என்று நினைத்து நெய், வெண்ணெய், எண்ணெய் ஆகியவற்றை சிறிய அளவில் கூட சாப்பிடாதிருத்தலாலும், வாயுவினுடைய சீற்றம் மலத்தை வெகுவாக இறுக்கி அது மலப்பையின் பகுதியை சுற்றி இருக்கும் இரத்தக் குழாய்களை அழுத்துவதின் வாயி லாக மெலிதான நுரையுடன் மற்றும் வலியுடன் இரத்தக் கசிவானது மலத்துடன் பெரும் சிரமத்திற்கிடையே வெளியேறும். உடல் கடுமையாக சோர்ந்துபோகும்.

எளிதில் செரிக்காத அதிக எண்ணெய்ப் பசை கொண்ட உணவுக ளின் சேர்க்கையினால் கபம் எனும் தோஷம் சீற்றமுற்று மலமானது இளகி வெண்ணிறம், மஞ்சள் நிறம், எண்ணெய் பிசுபிசுப்பு, கனம், குளிர்ச்சி போன்ற நிலைகளில் கெட்டியான நூலோடு கூடி வெளிர் மஞ்சள் நிறத்துடன் வழுவழுப்புடன் கூடிய இரத்தக் கசிவுடன் வெளியேறும். ஆசன வாயில் பூசப்பட்டது போன்ற உணர்ச்சி மற்றும் மரத்துப்போன தன்மையும் காணப்படும்.

இதனால் வாயுவினுடைய சீற்றத்தால் ஏற்படும் மலங்கலந்த இரத்த மூலத்திற்கு நெய்ப்பு மற்றும் குளிர்ச்சி தரும் உணவும் மருந்தும் பயன் படக்கூடும். கபத்தின் வாயிலாக ஏற்படும் இரத்தமூலத்திற்கு வறட்சி மற்றும் குளிர்ச்சி தரும் உணவும் மருந்துமே பயனுள்ளதாக இருக்கும்.

பித்தம் மற்றும் கபத்தினுடைய கலப்பினால் இரத்தமூலம் ஏற்படுவ தாக இருந்தால் பேதி மருந்து மூலம் இந்தப் பிரச்சினையைக் குணப்படுத்த வேண்டும். இவற்றின் சேர்க்கைக்கு தகுந்த மாதிரி இரத்தத்தில் ஏற்படும் தோஷக் கலப்பினை நன்றாக ஊகித்தறிந்து சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

அதில் தவறு ஏற்படும்பட்சத்தில் அது இரத்தபித்தம் எனும் நோயையும், காய்ச்சல், தண்ணீர் தாகம், பசியின்மை, ருசியின்மை, மஞ்சள் காமாலை, உடல்வீக்கம், ஆசனவாய் வலி, தோல் துடிப்புகள், சோகை, குடல காற்று மலம் மற்றும் சிறுநீர் தடை, தலைவலி, திமிர்ப்பு, உடல் கனம் போன்ற உபாதைகளைத் தோற்றுவிக்கக் கூடும்.

கசப்புச் சுவை நிறைந்த மருந்துகளை உபயோகிப்பதன் வாயிலாக பசியை நன்றாகத் தூண்டிவிட்டு தோஷத்தின் சீற்றத்தை அடக்கி இரத்தக் கசிவையும் தடுக்கும் வழிகள் இந்த உபாதைகள் உள்ளவர்களுக்கு நன்மை தரக்கூடும். அதற்கான சில மூலிகை பிரயோக விசேஷங்கள் சரகசம்ஹிதை எனும் ஆயுர்வேத புத்தகத்தில் காணப்படுகிறது. அவை:

◆ குடகப்பாலைப் பட்டையை சுமார் 50 கிராம் எடுத்து அரை லீற்றர் தண்ணீரில் கொதிக்க வைத்து 125 மில்லி லீற்றராக வெந்ததும் வடிகட்டி காலையில் 65 மில்லி லீற்றரும் மாலையில் 60 மில்லி லீற்றரும் இரண்டு சிட்டிகை சுக்குப்பொடி சேர்த்து சாப்பிடுவதால் நெய்ப்புடன் கூடிய இரத்தக் கசிவானது உடனடியாக நின்றுவிடும்.

◆ மாதுளம் செடியின் பட்டைக் கஷாயமும், சந்தனக்கட்டையின் கஷாயமும் மேற்குறிப்பிட்டதுபோல் தயாரித்து சுக்குப் பொடியுடன் சாப்பிடுவதும் சிறந்தது.

◆ வெண்சந்தனம், நிலவேம்பு, சிறுகாஞ்சுரி வேர் மற்றும் சுக்கு ஆகியவற்றின் கஷாயம்.

◆ மரமஞ்சள், இலவங்கப்பட்டை, அகில் கட்டை, வெட்டிவேர் மற்றும் வேப்பம்பட்டை சேர்த்து தயாரிக்கப்பட்ட கஷாயம் இரத்த மூலத்தை உடனடியாக குணப்படுத்தக் கூடியது.

◆ குடகப்பாலையினுடைய பட்டை மற்றும் பழங்கள், அதிவிடயம் மற்றும் மரமஞ்சள் ஆகியவற்றினுடைய தூள் ஆகியவற்றுடன் தேன் குழைத்துச் சாப்பிடலாம்.

◆ தண்டுக் கீரையின் சாற்றை எடுத்து ஆட்டுப்பாலுடன் கலந்து சாப்பிட மூலத்திலிருந்து இரத்தம் விழுதல் நிற்கும்.

◆ மஞ்சள், நிலவேம்பு, கோரைக்கிழங்கு மற்றும் சிறுகாஞ்சுரி ஆகியவற்றின் சூரணம் ஆகியவை இரத்தக்கசிவை உடனடியாக நிறுத்தக கூடியவை.

◆ மாதுளம்பழம் மற்றும் பார்லி எரித்த கரி ஆகியவற்றை நெய்யுடன் காய்ச்சி சாப்பிடலாம்.

◆ சின்ன வெங்காயத்தை மோருடன் சேர்த்துச் சாப்பிடுவதாலும், பச்சைப்பயறு, கொண்டக்கடலை ஆகியவற்றை கஞ்சியாக தயாரித்து பாலுடன் கலந்து சாப்பிடுவதாலும் இரத்தமூலம் குணமாகும்.

◆ கறுப்பு எள்ளுப்பொடியுடன் வெண்ணெய் குழைத்துச் சாப்பிடுதல், ஆடாதோடை வேரை கஷாயமிட்டு ஆசன வாயைக் கழுவுதல், வாழை இலையில் ஆசன வாய்ப்பகுதியில் படும்படி அமர்ந்து கொள்ளுதல், ஆயுர்வேத மூலிகை நெய் மருந்தாகிய சததொதக்ருதத்தை ஆசன வாயிலில் பூசுதல் போன்றவை இரத்தமூலத்தைக் குணப்படுத்தும் ஒரு சில வழிகளாகும்.

# நாடாளுமன்றத் தேர்தலில் நடுநிலை வகிக்கார் ஜனாதிபதி

## சுதந்திரக்கட்சிக்கு ஆதரவாக பிரசாரம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் பிரதான பங்கை வகிக்கவுள்ளார். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் நடுநிலை வகிக்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருந்து வந்தார். எனினும், மகிந்த தலைமையில் மூன்றாவது கூட்டணியொன்று உருவாக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால், எதிர்கால அரசியல் நிலைவரங்களைக் கருத்திற் கொண்டு அவர் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்துள்ளார்.

அதாவது, பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சுதந்திரக்கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்காவிட்டால், அக்கட்சியில் உள்ள பலர் மஹிந்தவின் பக்கம் செல்லக்கூடும். அத்துடன், சு.கவும் இரண்டாக உடையும் நிலை ஏற்படும். கொழும்பில் நடைபெற்ற சு.க. உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பின்போது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, கட்சியின் நலன் கருதி அவர் பொதுத் தேர்தலில் பிரசார மேடைகளில் ஏறவுள்ளார்.

அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரும் தேசிய அரசு அமைப்பதற்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர். அதேவேளை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படாமல் அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் சு.க. உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

# ஐ.தே.க.வின் அரசியல் கைதியாக ஜனாதிபதி மாற இடமளியோம்

## சுதந்திரக்கட்சி பொருளாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பாதுகாக்கும் நோக்கிலேயே அரசாங்கத்தில் இணைந்து கொள்கின்றோம் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக் கிய தேசியக் கட்சியின் அரசியல் கைதி யாக மாறுவதற்கு இடமளிக்க முடியாது.

இதன் காரணமாக எதிர்வரும் அரசாங்கத்தினால் நிறுவப்பட உள்ள தேசிய அரசாங்கத்தின் பதவிகளை ஏற்றுக்கொள்ள கட்சி தீர்மானித்துள்ளது. உருவாக்கப்பட உள்ள தேசிய அரசாங்கத்தின் தன்மை பற்றி சரியாக இன்னமும் தெரியாது.

குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை வகிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானங்களை எடுக்கவில்லை.

நாட்டைப் பற்றி சிந்தித்தே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் நாட்டில் புதிய அரசியல் கலாசாரமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை வெற்றியடைச்செய்ய உச்ச அளவில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

# புதிய அரசாங்கத்தின் ஆட்சியுடன் வலுவடைந்துள்ள சர்வதேச உறவு

## அரசாங்கம் தெரிவிப்பு



புதிய அரசின் ஆட்சியுடன் சர்வதேச சமூகத்துடனான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாக பெருந்தோட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் உலக நாடுகளுடனான உறவுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டன. எனினும் தற்போது உலக நாடுகளுடன் சிறந்த உறவுகள் பேணப்பட்டு வருகின்றன.

முக்கியத்துவம் குறைந்த நாடுகளினது தலைவர்களே கடந்த காலங்களில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

குறிப்பாக ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களே அதிகளவில் மகிந்த ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

எனினும், தற்போது உலகின் முக்கிய நாடுகளின் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

கடந்த அரசாங்கம் உலக நாடுகளிடம் பாரியளவில் கடன் பெற்றுக் கொண்டுள்ளது. புதிய அரசாங்கம் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் கூடுதல் நாட்டம் காட்டி வருகின்றது.

அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நேரடியாக நிதி உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய மின்சார இணைப்பை ஒரே நாளில் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

புதிய மின்சார இணைப்பை ஒரே நாளில் வழங்கும் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதில் பாவனையாளர்களுக்கு ஏற்படும் தாமதத்தை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரேநாளில் மின் இணைப்பு வழங்கும் திட்டம் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி ஆணமடுவ பகுதியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ், மின் இணைப்பைக் கோரும் அதே தினத்தில் கோரிக்கையை ஆராய்ந்து, மதிப்பீடு தயாரித்து, அதற்கான கட்டணம் செலுத்தப்பட்டதும் மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். எதிர்வரும் இரண்டு மாதங்களில் நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் புதிய மின்சார யோசனைத் திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

# விமலின் மனைவிக்கு விளக்கமறியல் வெளிநாடு செல்லவும் தடை

போலி ஆவணங்களைச் சமர்பபித்து, இராஜதந்திரக் கடவுச்சீட்டு பெற்றுக் கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவை இன்று வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளதுடன், அவர் வெளி நாடு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மாலபேயில் உள்ள மருத்துவமனையில் வைத்து கைது செய்யப்பட்ட சஷி வீரவன்ச, தொடர்ந்தும், பொலிஸ் பாதுகாப்புடன், அங்கேயே சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்றுமுன்தினம் மாலபே மருத்துவமனைக்குச் சென்ற கொழும்பு பிரதம நீதிவான், சஷி வீரவன்சவை இன்று வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லத் திட்டமிட்டதாகவும் எனவே அவரது கடவுச்சீட்டை முடக்க வேண்டும் என்றும் குற்றப்புலனாய்வுத் துறையினர், நீதிவானிடம் கோரியிருந்தனர்.

இதையடுத்து, அவரை வெளி நாடு செல்ல நீதிவான் தடை விதித்தார்.

அதேவேளை, மோசடியான முறையில் பெறப்பட்ட இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி, 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர், சஷி வீரவன்ச ஆறு தடவைகள் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

2010 செப்ரெம்பர் 13 ஆம் திகதி வழங்கப்பட்ட D3642817 இலக்கமுடைய இராஜதந்திர கடவுச்சீட்டில், சஷி வீரவன்சவின் பெயர், ரன்துனு முதியான் ஸலாகே சேஹஷா உதயந்தி ரணசிங்க என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



வைத்தியசாலையில் பிள்ளைகளுடன் சஷி

இந்தக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி அவர் முதன் முறையாக 2010 செப்ரெம்பர் 22 ஆம் திகதி கோலாலம்பூர் சென்று வந்துள்ளார்.

அதன் பின்னர், 2011 ஏப்ரல் 10 ஆம் திகதி டுபாய்க்கு ஏழு நாள் பயணத்தை மேற்கொண்டார்.

மீண்டும், அதே ஆண்டு மே 21 ஆம் திகதி டுபாய் சென்ற அவர், 24 ஆம் திகதி நாடு திரும்பினார்.

2011 ஒக்டோபர் 20 ஆம் திகதி மும்பைக்குச் சென்று மறுநாள் திரும்பினார்.

கடந்த ஆண்டு, இரண்டு முறை வெளிநாடு சென்றுள்ளார். ஏப்ரல் 14 ஆம் திகதி சிங்கப்பூர் சென்ற சஷி வீரவன்ச 17ஆம் திகதி திரும்பினார்.

அதன் பின்னர், ஜூன் 25 ஆம் திகதி வெளிப்படுத்தப்படாத இடம் ஒன்றுக்கு, யுஎஸ் 001 விமானத்தில் சென்றுள்ளார். இது ஜனாதிபதியால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானமாக இருக்கலாம் என்று நம்பப்படுகி றது. ஜூன் 30 ஆம் திகதி அவர் நாடு திரும்பியிருந்தார்.

அவர் இராஜதந்திரக் கடவுச்சீட்டை கடைசியாக பயன்படுத்தியது இதன்போதேயாகும்.


அவரது சாதாரண கடவுச்சீட்டு N1284124 என்ற இலக்கத்தில், 2004 மே 24 ஆம் நாள் சீரஜா உதயந்தி வீரவன்ச என்ற பெயரில பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ள குடிவரவு; குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா, முன்னாள் அமைச்சர் என்ற வகையில் விமல வீரவன்ச எழுத்து மூலம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே, சஷி வீரவன்சவுக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, சஷி வீரவன்சவின் தேசிய அடையாள அட்டை தொடர்பான ஆவணங்கள், ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து காணாமற்போயுள்ளதாகவும், நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விமல் வீரவன்சவும் தனது வயதைக் குறைத்து ஆவணங்களில் மோசடி செய்துள்ளதும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

# பணிப்பாளர் சபையில் முதன் முறையாக பிக்கு



லங்கா ஹொஸபிடல்ஸ (முன்னைய அப்பலோ) நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக தீனியாவெல பாலித தேரர் நியமிக்கப் பட்டுள்ளார்.

பாலித தேரர் ஸ்ரீலங்கா மஹாபோதி சங்கத்தின் பிரதிச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

லங்கா ஹொஸ்பிடல்ஸ் நிறுவனத்தில் 13 பேர் பணிப்பாளர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு சொந்தமான 'சீ நியூஸ்' இணையத்தளத்தின் பிரகாரம், இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராக பௌத்த பிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளராகவும் தீனியாவெல பாலித தேரர் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது

# சிறுநீரக நோயை ஒழிப்பதற்கு அரசு நடவழக்கை எடுக்கும்

## ஜனாதிபதி உறுதியளிப்பு

சிறுநீரக நோயை முற்றாக ஒழிப்பதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


சிறுநீரக நோய் தொடர்பில் நன்கறிந்த அரசாங்கம் என்ற வகையில், நாட்டிற்கு கொண்டு வரப்படும் விவசாய இரசாயனங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

100 நாட்கள் வேலைத் திட்டத்திற்கு அமைய, சிறுநீரக நோய்க்கான காரணங்களைக் கண்டறிவதற்கான நிகழ் வொன்று பதவியாவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

தகுதியானதை தெரிவுசெய்வதற்கும், தகுதியற்றதை நிராகரிப்பதற்கும் புதிய அரசாங்கம் தெளிவான தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதி இந்த நிகழ்வில் குறிப்பிட்டுள்ளார்.


நாடு வெற்றிப் பாதையை நோக்கி பயணிப்பதற்கும், வர்த்தக சமூகம் சர்வதேச ரீதியில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும் அரசாங்கம் தயாராகவுள்ளது எனறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

70.




........................

71.




........................

72.



........................

**(12)** பின்வரும் வரைபடத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக
தேநீர் விருந்துபசாரம் ஒன்றின் விருந்தாளிகள் பெற்றுக்கொண்ட சிற்றுண்டிகளின் விபரத்தை கீழுள்ள வரைபடம் காட்டுகின்றது




73. விருந்துபசாரத்தில் மூன்று சிற்றுண்டிகளையும் உண்டோர் எத்தனை பேர்?
........................................

74. வடை, ரோல் என்பவற்றை மட்டும் விரும்பி உண்டோர் எத்தனை பேர்?
........................................

75. வடையை மட்டும் விரும்பி உண்டோர் எத்தனை பேர்?
........................................

76. விருந்துபசாரத்தில் கேக்கை உண்டோர் எத்தனை பேர்?
........................................

77. விருந்துபசாரத்தில் எந்தவொரு சிற்றுண்டிகளையும் சாப்பிடாதோர் எத்தனை பேர்? ........................

78. விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ........................

79. கோவில் திருவிழா ஒன்றிற்கு சிவப்பு, மஞ்சள், நீலம், என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. 83ஆவதாக ஒளிர்ந்த மின்குமிழின் நிறம் என்ன?
........................................

80. 1km நீளமான வீதியொன்றின் இருமருங்கிலும் 50m இடைவெளியில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. இதற்கு எத்தனை கம்பங்கள் தேவைப்பட்டிருக்கும்?
........................................

81. 6 மாடுகள் 6 சாக்குப்புல்லை 6 நாட்களில் உண்ணுமாயின் 1 மாடு ஆறு சாக்குப்புல்லை எத்தனை நாட்களில் உண்ணும்?
........................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. 7km  2. இல்லை  3. சரத்  4. 40km  5. 75  6. 12855ரூபா  7. 9000ரூபா  8. 180ரூபா
9. 50  (02). 10. 20cm  11. 24cm  12. 12/24 / 1/2  (03).13. O  14. சரி  15. பிழை  16. சரி
17. பிழை  18. O  19. 10  20. 60243  21. 4cm²  22. 9ரூபா  23. 63
24. 2kg 375g  25. 50  26. 13 : 30மணி  27. 11m  28. 33  29. 35m  30. மையம்  31. ⊖
32. 1/2 m  33. பலமுறை  34. 40நிமிடம்  35. 60  36. கந்தன்  37. 30,20  38. ரூ.197.10சதம்
39. 29.60  (04).40. 135  41. 245  42. 136  43. 435  44. 50ரூபா  45. 75ரூபா
46. 6  47. 5  48. (i) வலஞ்சுழி

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(01)** பின்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிந்து கீறிடுக

01. மகனின் தற்போதைய வயது தந்தையின் வயதின் $\frac{1}{5}$ பங்கு ஆகும். 5 வருடங்களுக்கு முன்னர் மகனின் வயது 5 வருடங்கள் எனின், தந்தையின் தற்போதைய வயது யாது?
(1) 25 வருடங்கள்  (2) 30 வருடங்கள்  (3) 50 வருடங்கள்

02. மைதானம் ஒன்றின் ஒரு நிரையில் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களையுடைய கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சிவப்பு நிறத்தை அடுத்து மஞ்சள் நிறமும், மஞ்சள் நிறத்தை அடுத்து நில நிறமும் என்ற ஒழுங்கில் இவை பறக்க விடப்பட்டிருப்பதால் 25 ஆவதாகப் பறக்க விடப்பட்ட கொடியின் நிறம் யாது?
(1) சிவப்பு  (2) மஞ்சள்  (3) நீலம்

03. ஐம்பதாவது ஆண்டு நிறைவின் போது கொண்டாடப்படும் விழா எது?
(1) பொன்விழா  (2) பவளவிழா  (3) மணி விழா

04. ஒரு வரிசையில் குமார் 14ஆவது ஆளாக நின்றான். அவனுக்குப் பின்னால் 9பேர் நின்றனர். எனின், அவ்வரிசையில் நின்றவர்களின் எண்ணிக்கை யாது?
(1) 21  (2) 23  (3) 25

05. 'பாலைப்போல் நிலவு வானில் பவனிவரப்போகுது' இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமானம் யாது?
(1) நிலவுவானில்  (2) பால்  (3) பவனி வரப்போகுது

06. எமது நாட்டின் மிருகக்காட்சிச்சாலை அமைந்துள்ள இடம் எது?
(1) கண்டி  (2) நுவரெலியா  (3) தெஹிவளை

07. கீழ்வருவனவற்றுள் நரம்புக்கருவி அல்லாதது?
(1) மேளம்  (2) வீணை  (3) யாழ்

**(02)** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஆரம்பம் முதல் இறுதி வரையான 5 நிலைகளைப் படிமுறையில் காட்டும் ஒரு விடையுள்ளது. அவ்விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக

08. (1) காய், பூ, மரம், கன்று, விதை
(2) விதை, கன்று, மரம், பூ, காய்
(3) காய், விதை, மரம், பூ, கன்று

09. (1) காலை, மத்தியானம், மாலை, இரவு, நள்ளிரவு
(2) மத்தியானம், மாலை, காலை, இரவு, நள்ளிரவு
(3) இரவு, நள்ளிரவு, காலை, மாலை, மத்தியானம்

10. ஒலிம்பிக் விளையாட்டு எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும்?
(1) 4  (2) 8  (3) 3

11. டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்பு எது?
(1) அனோபிலிஸ்  (2) கியூலெக்ஸ்  (3) ஈடிஸ்வகை

12. சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மையுள்ள பிராணி எது?
(1) மாடு  (2) ஆடு  (3) முயல்

13. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்?
(1) சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா  (2) ஆதர்.சி.கிளாக்  (3) கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி

**(03).** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் 1847ஆம் ஆண்டு அமெரிக்காவில் மிலான் நகரில் பிறந்தார். அவரது தந்தை சாதாரண வியாபாரி என்றாலும் கூட எடிசனின் வளர்ச்சிக்குப் பெற்றோர் கடுமையாகப் பாடுபட்டனர். எடிசனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம் இந்த ஆர்வம் வளரக் காரணம் அவரது தந்தைதான். எடிசன் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும் போது அவருக்குப் பரிசு வழங்கிப் பாராட்டுவாராம். எடிசனுக்கு முன்பு சேர் ஹம்பிரி டேவி என்பவர் மின்விளக்கை கண்டுபிடித்தாலும் அது குறைவான நேரமே ஒளிர்ந்தது. ஆனால் எடிசன் உருவாக்கிய மின்விளக்கு நீண்ட நேரம் ஒளிர்ந்து சாதனை படைத்தது.

14. தோமஸ் அல்வா எடிசன் எங்கே பிறந்தார்? ..............................

15. எடிசனின் தந்தையார் தொழில் என்ன? ..............................

16. எடிசனின் பொழுதுபோக்கு என்ன? ..............................

17. எடிசனின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள் யாவர்? ..............................

18. எடிசனின் கண்டுபிடிப்பு என்ன? ..............................

19. எடிசன் பிறந்த ஆண்டு என்ன? ..............................

20. இப்பந்தியிலுள்ள இறந்தகால படர்க்கை வினைமுற்று இரண்டு தருக?

.............................. ..............................

21. இப்பந்தியிலுள்ள வினையெச்சம் இரண்டு தருக?

.............................. ..............................

22. இப்பந்தியிலுள்ள படர்க்கைப் பெயர்கள் இரண்டு தருக?

.............................. ..............................

23. இப்பந்திக்குப் பொருத்தமான பழமொழி ஒன்று தருக?

..............................

24. செயற்கை ஒளிமுதல் எது? ..............................

(04) ஒத்தசொல் தருக

25. ஆர்வம் - .............................. 26. ஆண்டு - ..............................

27. ஒளிந்தது - .............................. 28. வெகுமதி - ..............................

(05) பின்வரும் பதங்களுக்குரிய ஆங்கிலச்சொல்லை எழுதுக

29. நாடு - .............................. 30. புத்தகம் - ..............................

31. மின்குமிழ் - .............................. 32. பரிசு - ..............................

(06) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக

33. கலுவேல்ல - .............................. 34. விது ஹல்வதி - ..............................

(07) கீழ்வரும் மரபுத்தொடர்களின் பொருள்களை எழுதுக

35. கைகடித்தல் - ..............................

36. கழுத்தறுத்தல் - ..............................

37. கண்மலர்தல் - ..............................

38. கண்மூடுதல் - ..............................

39. கண்வளர்தல் - ..............................

40. காதுகொடுத்தல் - ..............................

(08) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக

41. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியில் / மரங்கள் / நின்றன

..............................

42. செய்வதைக் / துணிப்பொம்மைகள் / சிவநந்தினி / கவனித்தாள் / கூர்ந்து

..............................

(09) சரியான விடையின் கீழ்க் கோடிடுக

43. நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியது
1) தவளை 2) மீன் 3) மனிதன்

44. வேகமாக ஓடக்கூடிய பறவை
1) தூக்கணாங்குருவி 2) திக்கோழி 3) கிளி



45. குட்டி ஈன்று பாலூட்டும் மீன்
1) டொல்பின் 2) சுறா 3) பாரை

46. கண்ணாம்பினாலான புறவன் கூட்டைக் கொண்டது
1) நத்தை 2) சோகி 3) மேற்கூறியஇரண்டும்

47. கூடுகட்டத் தெரியாதது,
1) காகம்,மைனா 2) குயில்,கோழி 3) செம்பகம்,மரங்கொத்தி

48. ஆமை முட்டையிடும் நிறம்,
1) மஞ்சள் 2) வெள்ளை 3) கபிலம்

49. சூரிய ஒளியிலுள்ள நிறம் அல்லாதது,
1) சிவப்பு 2) செம்மஞ்சள் 3) கறுப்பு

50. ஊசித் துளைக்கமராவின் இயல்பு,
1) தலைகீழான விம்பம் 2) பொருட்களை விடச் சிறியது 3) மேற்கூறிய இரண்டும்

51. வீட்டு ஈ பரப்பும் நோய் அல்லாதது
1) வாந்திபேதி 2) நெருப்புக்காய்ச்சல் 3) ஜப்பானிய மூளைக்காய்ச்சல்

52. பசுப்பாலை நற்பாதுகாப்புச் செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்
1) லூயி பாஸ்ரர் 2) மார்க்கோனி 3) கலிலியோகலிலி

53. கட்புல செவிப்புல சாதனம்
1) வானொலி 2) தொலைக்காட்சி 3) தொலைபேசி

54. தற்போதைய பதிவுத்தபாற் கட்டணம்
1) 20.00 2) 30.00 3) 35.00

55. நீலமும் பச்சையும் சேர்க்கும் போது உருவாகும் நிறம்
1) மஞ்சள் 2) நீலம் 3) ஊதா

56. மூடிய உருவம் ஒன்று தயாரிக்க ஆகக்குறைந்தது எத்தனை நேர் கோடுகள் தேவை
1) 5 2) 6 3) 3

57. உள்ளக விளையாட்டுக்களில் அடங்காதது
1) சதுரங்கம் 2) எல்லே 3) மேசைப்பந்து

(10) சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக

58. பச்சைக் காய்கறிகளை வெட்டுவதற்கு முன் கழுவுவது சிறப்பாகும் ( )
59. பாதசாரிகள் எப்போதும் இடது பக்கத்தால் செல்லுதல் வேண்டும் ( )
60. நெப்பந்திசு பூச்சியை உணவாக உண்ணும் தாவரமாகும் ( )
61. பப்பாசி ஆணிவேர் கொண்ட தாவரமாகும் ( )
62. பல்லி முட்டை மஞ்சள் நிறமாகும் ( )

(11) பின்வருவன குறிப்பவை யாவை?


63. .............................. 64. .............................. 65. ..............................

66.

..............................

67.

..............................

68.

..............................

69.

..............................

# மனித உரிமை வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை அரசாங்கம்

## குற்றம் சாட்டுகிறது கபே




மனித உரிமை தொடர்பில் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என கபே என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் புதிய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள், அரசியல் கைதிகள், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கொலையுண்டவர்கள், அழுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவரகள் உள்ளிட்ட ஜனநாயக விரோத நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் கூட்டமொன்றில் பங்கேற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன எனினும், ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு 50 நாட்களை அண்மிக்க உள்ள நிலையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை.

காணாமற்போன அரசியல் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடாத்தப்படும் என அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது எனவும், காணாமற்போன லலித் குகன் ஆகியோர் தொடர்பில் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடாத்தப்படுவதாகவும் ஏனைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெயககுமாரி இதுவரையில் விடுதலை செய்யப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரது மகள் விபூசிகா தொடர்ந்தும் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குமாறு முன்னணி சோஷலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக தெரிவித்த அவர், அழுத்தம் காரணமாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள ஊடகவியலாளாகளை நாடு திரும்புமாறு அரசாங்கம் கோரியுள்ள போதிலும், இது வரையில் ஊடகவியலாளர்கள் நாடு திரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் புலம்பெயர்ந்து வாழும ஊடகவியலாளர்கள் நாடு திரும்பக்கூடிய பின்னணி உருவாக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் பழிவாங்கலால் பாதிப்பு ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு உதவி

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

பல ஆண்டுகளாக பல்வேறு அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு இலக்கான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், அங்கத்தினர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் ஆயிரக்கணக்கான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அரசியல் ரீதியாக பழிவாங்கியிருந்தது.

இதன் காரணமாக குறித்த உறுப்பினர்களும் அங்கத்தினர்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தனர்.

தொழில்களை இழத்தல், வீடுகள் எரிக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் கட்சித் தலைமையகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

முறைப்பாடு செய்த அனைவருக்கும் நீதியை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பழிவாங்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை ஆராயும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

# லசந்த படுகொலை விசாரணை துரிதப்படுத்துமாறு உத்தரவு

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொலிஸாருக்கு, கல்கிஸை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கல்கிஸை நீதிவான் மேலதிக மாவட்ட நீதிவான் மொஹமட் சஹாப்டீன் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.


லசந்த படுகொலை குறித்த வழக்கு விசாரணைகள் அண்மையில் கல்கிஸ்ஸ நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அண்மையில் கடந்த அமைச்சரவையின் முக்கிய அமைச்சர் ஒருவர் புலனாய்வுப் பிரிவினரிடம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொள்ளுமாறு லசந்தவின் உறவினர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிவானிடம் கோரியுள்ளனர்.

லசந்த படுகொலைச் சம்பவம தொடர்பிலான விசாரணைகள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்ட நீதிவான் அடுத்த மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணைகளை ஒத்தி வைத்துள்ளார்.

# உரிய நேரத்தில் பொதுத்தேர்தல் இது ஜே.வி.பி.யின் கோரிக்கை



உரியநேரத்தில் பொதுத் தேரதல் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி. பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது எமது கட்சி எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி சேரப் போவதில்லை.

பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. கட்சி தனித்தே போட்டியிடும்.

பல்வேறு காரணங்களைக் காட்டி அரசாங்கம் பொதுத் தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றது.

எனினும் அவ்வாறு தேர்தலை ஒத்தி வைக்கும் உரிமை அரசாங்கத்திற்கு கிடையாது.

ஜனாதிபதியின் 100 நாள் திட்ட யோசனையில் எதிர்வரும் ஏபரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதியை மீறும் முயற்சிகளை சில தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், இவ்வாறு நாடாளுமன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதனை அனுமதிக்க முடியாது என ரில்வின் சில்வா தெரிவித்தார்.

# குற்றச்செயல் எண்ணிக்கை வீழ்ச்சி என்கிறது பொலிஸ்



(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களின் எண்ணிக்கையில் கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

நாட்டில் வருடாந்தம் இடம்பெறும் கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை 600 ஆக குறைவடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொலைகள் மாத்திரமன்றி, கொள்ளைச் சம்பவங்கள், வீடுடைப்பு உட்பட அனைத்து குற்றச்செயல்களும் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சனத்தொகை அதிகரித்து, நகரமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி என்பன ஏற்பட்டுள்ள நிலையில், குற்றல்செயல்கள் குறைவடைந்துள்ளமை சிறந்த விடயமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொலிஸாரும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் முன்னெடுத்த விசாரணைகள் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்தின் பாவனை என்பன குற்றச்செயல்களின் வீழ்ச்சிக்கு காரணமென அஜித் ரோஹன சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றம், சட்டமா அதிபர், சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலரின் ஒத்துழைப்பும் குற்றச்செயல்களைக் குறைப்பதற்கு வழிசெய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முரசின் இன்றைய பலன்

(25.02.2015 புதன்கிழமை)

ஐய வருஷம் மாசிமாதம் 13 ஆம் திகதி.
சப்தமி / அமிர்தசித்தம் - யோகம்
கார்த்திகை நட்சத்திரம் முன்னிரவு 11.23 வரை. பின் ரோகினி.
இராகு காலம 12.29 - 01.59 வரை. சுபநேரம 4.39 - 06.29 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
மருமகள் மாமியார் முரண்பாடு தீர்ந்து சுமுகநிலை ஏற்படல்.

**ரிஷபம்**
கடனை அடைத்து கௌரவத்தைக் காப்பாற்ற சொத்தின் ஒரு பகுதியை விற்க முயலல்.

**மிதுனம்**
காணாமல் போனவர் பற்றிய தகவல் கிடைத்து ஆனந்தப்படல்.

**கடகம்**
நிலுவை பெற காவற்றுறை அதிகாரி சமரசம் செய்து வைத்தல்.

**சிம்மம்**
அயலவருடன் ஏற்பட்டிருந்த பிரச்சினை பேச்சுவார்த்தையினால் அற்றுப்போதல்.

**கன்னி**
மனதை வாட்டிய சம்பவம் புரிந்துணர்வினால் விலகி விடல்.

**துலாம்**
மடிக்கணனி மூலம் பொருத்தமான துணைவரைத் தேடுதல்.

**விருச்சிகம்**
நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை விற்றுவாங்கும் கைங்கரியத்தில் ஈடுபடல்.


**தனுசு**
கடல் மார்க்கமாக பிரயாணம் செய்யும் முயற்சியை மனையாள் தடுத்து விடல்.

**மகரம்**
பொறாமை, பகையுணர்வினைக் கைவிட்டதால் நிம்மதி பிறத்தல்.

**கும்பம்**
பழையதை மெருகூட்டி புதிதாக விற்பனைக்கு வருவதையிட்டு எச்சரிக்கையாக இருங்கள்.

**மீனம்**
கண்டிக்க முயன்றவேளை குடும்பத்தில் களேபரம் வெடித்து கவினநிலை கெடுதல்.

# தொடர் தோல்வியின் எதிரொலி ராகுல் அரசியலிலிருந்து ஓய்வு



இந்திய நாடாளுமன்றத் தேர்தல், அதனைத் தொடர்ந்து நடந்த சட்டமன்றத்தேர்தல், டெல்லி சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியை சந்தித்தது.

தேர்தல் தோல்விகள் மற்றும் தனக்கு எதிராக எழுந்துள்ள அதிருப்தி காரணமாக அக்கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி கவலைய டைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து அரசியல் பணிகளில் இருந்து சில காலம் ஒதுங்கி இருக்க அவர் முடிவு செய் துள்ளார்.

ராகுல் காந்தியின் முடிவை ஏற்ற காங்கிரஸ் தலைவரும், அவரது தாயாருமான சோனியா காந்தி, அவருக்கு சில வாரங்கள் விடுமுறை அளித்துள்ளதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த ஓய்வின்போது கட்சியை பலப்படுத்தி, வரும் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிப் பெறுவதற்கான வழிமுறைகளை ராகுல் காந்தி ஆலோசனை நடத்துவார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் ராகுல் காந்தியின் ஓய்வு முடிவுக்கு காரணம் சோனியா காந்தியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடே என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் காங்கிரஸ் தலைமையுடன் அவருக்கு மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் விளைவே ஓய்வு முடிவு எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**விவசாயபீடம்,**
**அறிவியல் நகர், கிளிநொச்சி**

**விரிவுரைகள் ஆரம்பமும் புகுமுக மாணவர்களுக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வும்**


விவசாயபீடத்திற்கு 2013/2014 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக வழி காட்டல் நிகழ்வு எதிர்வரும் 09.03.2015 திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு அறிவியல்நகர், கிளிநொச்சி விவசாயபீடத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புகுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

*விடுதி வசதி வழங்கல் 08.03.2015 பி.ப 3.30 மணியிலிருந்து மேற்கொள்ளப்படும்.*

(C/3825)


# மதமாற்ற குறிக்கோளே அன்னை தெரசாவின் சேவை

## ஆர்.எஸ்.எஸ். தலைவரின் சர்ச்சை பேச்சு



அன்னை தெரசாவின் சேவையின் பின்னணியில் கிறிஸ்தவ மதமாற்றமே குறிக்கோளாக இருந்ததாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கூறியுளளார்.

அவரது இந்த கருத்து பல்வேறு தரப்பினர் மத்தியிலும் பல சர்ச்சையை கிளப்பி யுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பஜேரா எனும் பகுதிக்குட்பட்ட பரத்பூர் கிராமத்தில் அப்னாகர் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்கள் மஹிளா சதன், சிசு பால் கிரஹா ஆகியனவற்றின் திறப்புவிழாவில் பேசியபோதே மோகன் பகவத் இவ்வாறு கூறியுள்ளார்.

மோகன் பகவத் பேசியதாவது:

அன்னை தெரசாவின் சேவைகள் எல்லாம் மிகவும் நல்லதாகவே கருதப்பட்டிருக்கும், அவரது சேவைக்கு பின்னணி குறிக்கோள் மட்டும் மத மாற்றமாக இல்லாமல் இருந்திருந்தால்.

மத மாற்றத்தைப் பற்றி நான் விமர்சிக்கவில்லை. ஆனால், சேவையின் பெயரில் மத மாற்றத்தை மேற்கொள்ளும் போது, அந்தச் சேவைக்கான அடிப்படை ஆதாரமே மதிப்பற்றதாகி விடுகிறது.

அன்னை தெரசாவின் குறிக்கோள் மத மாற்றமே, ஆனால், இங்கு தனது சேவையைத் தொடங்கியுள்ள அப்னா கர் அமைப்பின் கொள்கை ஏழைகளுக்கு சேவை செய்வது மட்டுமே இவ்வாறு பகவத் பேசியுள்ளார்

# ஐ.எஸ்.முக்கிய தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்



ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்கின் மொசூல் (Mosul) நகரில் ஐ.எஸ். அமைப்பை ஆளும அபூ டஜனா (Abu Dajana) எனபவரை ஐ.எஸ். தீவிரவாதிகள் உட்பட இரண்டு மர்ம நபர்கள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச்செய்தியை வெளியிட்ட குர்திஷ் இன ஊடகங்கள் தற்போது இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதேபோல் கடந்த ஜனவரி மாதம் ஐ.எஸ். அமைப்பின் மற்றொரு முக்கிய தலைவர் தலை துண்டித்துக் படுகொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தொடர்ந்து இவ்வாறு நடந்து வரும் சம்பவங்கள் தீவிரவாதிகளிடையே சற்று பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 2014 ஆம் ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடாக காரைநகர் களபூமி விளானை சனசமூகநிலையத்தைப் புனரமைப்பு செய்வதற்கும், களபூமி சனசமூக நிலையத்திற்கான தளபாட கொள்வனவிற்கும், காரைநகர் இலங்கை போக்குவரத்து மாதிரி சாலைக்கு நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார வேலி அமைப்பதற்கும், சலவைக்குளம் புனரமைப்புச் செய்வதற்கும், சிவகௌரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மீன் கூறு சந்தைக்கான மலசல கூடம் அமைப்பதற்கும் தனது நிதியை ஒதுக்கித் தந்தமைக்காகவும், இந்த நிதியை கிடைக்க முன்மொழிந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் (ரஜனி) அவர்களுக்கும் எமது நன்றியினையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

களபூமி கலையக நிர்வாகம்,
விளானை சனசமூக நிலைய நிர்வாகம்,
இலங்கை போக்குவரத்து மாதிரிச்சாலை
காரைநகர் பணியாளர்கள்,
சலவைத் தொழிலாளர்கள், காரைநகர்
சிவகௌரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க
நிர்வாகத்தினரும், அங்கத்தவர்களும்.



(R/601)

# விசாரணை அறிக்கை தள்ளிவைப்பு பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

## ஐ.நா.வுக்கான மகஜரில் தெரிவிப்பு

எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் வெளியாகும் என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த இலங்கை மீதான விசாரணை அறிக்கையை தாமதப்படுத்தி அதனை செப்ரெம்பர் மாதத்திற்கு பிற்போட்டமைக்கு நாம் எமது ஆழ்ந்த விசனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் இந்த அறிக்கை திட்டமிட்டபடி வெளிவரவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். என்று நேற்றைய பேரணியின் முடிவில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசாங்கம், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் என்ற நம்பிக்கையில் அறிக்கை பிற்போடப்படுவதை தாங்கள் பரிந்துரை செய்துள்ளதாக நாம் புரிந்துகொள்கிறோம்.

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தமை மூலம் மகிந்தவுக்கு எதிரான தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆட்சி மாற்றத்தின் ஊடாக பாரிய ஒரு மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் நாம் வாக்களிக்கவில்லை.

ஜனாதிபதி சிறிசேன ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஒரு மாத காலப் பகுதி தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்திடம் இருந்து புதிய மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்கமுடியாது என்பதை நிரூபித்துவிட்டது.

நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளான இராணுவ மயமாக்கம், மக்கள் தம் சொந்தக் கிராமங்களில் குடியேறல், காணாமற்போனோர் மற்றும் சட்டவிரோத தடுப்புக் காவல் சம்பந்தப்பட்டோர் பிரசசினைகள் தொடர்பில் சிறிசேன அரசாங்கத்தால் குறிப்பிடக்கூடிய எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் இப்பிரச்சினைகள் உள்ளடக்கப்படவும் இல்லை. அரசியல் தீர்வுக்கான பேச்சைக் கூட சிறிசேன அரசு மேற்கொள்ளவில்லை.

ஆகவே, மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் இலங்கை மீதான தம் விசாரணையை, தகவல் தருவோருக்குப் போதிய பாதுகாப்பு, சர்வதேச விசாரணையாளர்களால் மேற்கொள்ள இலங்கை வர அனுமதி கோரி, இதன் மூலம் ஒரு முழுமையான - முறையான அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு உதவும் வகையில், ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து சர்வதேச விசாரணைக்கு இட்டுச் செல்லும் வகையில் அவசியமான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்குமாறு தங்களை வேண்டுகின்றோம் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### யாழில்...

தேவக்குருக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ. இராசகுமாரன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

1000 இற்கும் அதிகமான பொது மக்கள் மற்றும் காணாமற் போனோரின் உறவுகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள்,கன்னியாஸ்திரிகள் எனப்பலர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, நீதியான விசாரணை வேண்டும், ஜனாதிபதி வெற்றிக்கு மார்ச்சில் அறிக்கை, நாடாளுமன்ற வெற்றிக்கு செப்ரெம்பரிலா, இலங்கை அரசு எம்மீது மேற்கொண்ட குற்றங்களுக்கு பக்கச் சார்பற்ற சர்வதேச நீதி விசாரணை உடனடியாக வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமற் போனோரை கண்டுபிடித்து தாபோன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை கைகளில் தாங்கியவாறு அமைதியான வழிமுறையில் இந்தப் பேரணி நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டமானது, இராமநாதன் வீதி வழியாக திருநெல்வேலி பரமேஸ்வரா வீதியை வந்தடைந்து அங்கிருந்து பலாலி வீதி வழியாக கந்தர்மடத்தினை சென்றடைந்து அங்கிருந்து, அரசடி வீதி வழியாக நல்லூர் வடக்கு வீதியில் நிறைவடைந்தது,

அங்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அ.இராசகுமாரன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கான மகஜரினை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பிடமும், சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா. வாசுதேவ குருக்களிடமும் கையளித்தார்.

இந்த அறிக்கையினை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் கொழும்பில் உள்ள ஐ.நா. வதிவிட பிரதிநிதியிடம் கையளிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (25, இ)

---

### கூரையில்..

வேலை செய்துகொண்டிருந்த போது, தவறி வீழ்ந்துள்ளார். இவருடன் பணியாற்றியவர்கள் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு வந்தபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார்.

---

### அரசு...

அமர்ந்து விட்டார்.

கடந்த ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதிய வடக்கு மாகாண அமைச்சரவைப்பத்திரத்திலுள்ள கணக்கு விபரங்களினூடாக 69 கோடிக்கான மாற்றுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தும் 31ஆம் திகதிய கணக்குகளில் ஒருகோடியே 65 இலட்சம் ரூபாதான் செலவளிக்காது இருப்பதாக காண்பிக்கப்பட்டிருப்பது குறித்து வடமாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முதலமைச்சரிடம் வாய்மொழி மூலம் கேட்ட கேள்விக்கு அக்கணக்கு தொடர்பில் மழுப்பலான பதிலையே முதலமைச்சர் நேற்றைய அமர்வில் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆண்டில் இருந்த மூலதனச் செலவீனங்களின் ஒதுக்கீட்டில் மழை வெள்ளம் மற்றும் நிதி கிடைத்ததில் தாமதம் போன்ற காரணங்களால் திணைக்களங்களினால் முடிவுறுத்த முடியாத வேலைகளுக்காக 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தினுள் முடிவுறுத்தும் வகையில் அதற்கான ஒதுக்கீட்டு தொகையினை மத்திய வங்கியில் வைப்புச் செய்வதற்கு மாகாண அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது 2015 மார்ச் மாதத்தினுள் ஏற்கனவே கூறப்பட்ட திட்டங்களுக்கு மாற்றீடான வேறு திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு செலவு செய்ய முடியும் எனவும் அமைச்சுக்களின் செயலாளர்களின் உறுதிமொழியுடன் இத்தொகை மத்திய வங்கியில் வைப்பிடப்பட்டது. என எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்கு புறம்பான பதில் முதலமைச்சரினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் பணம் வைப்பிலிட்டமை குறித்து வடமாகாண சபையின் இணையத்தளத்தில் 31.12.2014 வெளியிட்ட கணக்கறிக்கையில் எதுவுமே தெரிவிக்கப்படவோ, காட்டப்படவோ இல்லை. இதற்கான பதிலையே எதிர்பார்ப்பதாக தவராசா மீண்டும் கோரிய நிலையில் இணையத்தளத்தை வைத்து கேட்கும் கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாது. அந்த இணையத்தளம் ஆளுநரின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதை நான் பார்க்கவில்லை. பிரதம செயலாளரிடம் தான் இது பற்றி விசாரிக்க வேண்டும். வடமாகாண சபையின் இணையத்தளத்திற்கும் எமக்கும் தொடர்பில்லை. என மழுப்பலாக பதிலளித்ததுடன் அதைப்பற்றி பின்னர் பார்ப்போம் என இது விடயம் குறித்து மூடி மறைக்கும் வகையில் மழுப்பலாகவே முதலமைச்சர் பதிலளித்தார்.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதாக இணையத் தளத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் கணக்கு மீதியின் போது வைப்பிலிட்ட தொகை குறிப்பிடப்படாது விட்டது. தவறுதானே எனவும் கணக்கறிக்கையிலுள்ள தவறு குறித்து எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக் காட்டிய போது அதை அவைத்தலைவரும் ஏற்றுக்கொண்டிருந்த போது இடையில் குறுக்கிட்ட ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியமையை அவையில் இருந்த பல உறுப்பினர்களும் ஆட்சேபித்தனர். தகாத வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்த முடியாது என அஸ்மினுக்கு அவைத் தலைவர் கண்டிப்புடன் தெரிவித்ததுடன் இக்கணக்கறிக்கை குறித்து தகவலறிந்து தெரிவிப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இக்கணக்கறிக்கையின் பிரதியை பெற்றுக் கொண்ட முதலமைச்சர் இது குறித்து அடுத்த அமாவில் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். (இ)

---

# பண்டார வன்னியனுக்கு முல்லையில் சிலை

## தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வன்னி நிலப்பரப்பை ஆட்சி செய்த தமிழ் மன்னனான பண்டார வன்னியனுக்கு வாளேந்திய உருவச்சிலை முல்லைத்தீவில் நிறுவ வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு இராச்சியத்தை ஆண்ட பண்டார வன்னியனுக்கு முல்லைத்தீவு நகரில் சிலை நிறுவப்படவேயில்லை ஆனால் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் பண்டார வன்னியனுக்கு சிலை நிறுவப்பட்டுள்ளது. எனவே அதை நிறுவவேண்டும் என உறுப்பினர் து.ரவிகரனினால் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ)

---

### சம்பந்தனும்...

ருந்த மனு குறித்த பிரதிநிதிகள் சமூகம் அளிக்காத நிலையில், மன்னார் ஆயர் இராஜப்பு யோசேப் ஆண்டகை, பிரம்மசிறி வாசுதேவ குருக்கள் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

இப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்த அதேநேரம் தமது ஆதரவையும் வழங்கியிருந்தது.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் ஆகியோர் பேரணியில் கலந்து கொள்ளாது புறக்கணித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு பலதரப்பட்ட அரசியல் தரப்பினராலும் அழைப்பு விடுக்கப்பட்டும், ஆதரவு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மக்கள் ஆர்வம் காட்டாமல் இருந்ததாகவும் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

---

### படை..

திட்டமிட்டுள்ளார்.

வலி. வடக்கில் இராணுவத்தினர் கையகப்படுத்தியிருக்கும் ஆயிரம் ஏக்கர் காணியை விடுவித்து, உரித்துடையோருக்கு வழங்க விருப்பதாக அமைச்சர் சுவாமிநாதன் அண்மையில் உறுதியளித்திருந்தார். இந்த நிலையில் வலி. வடக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் பற்றிய விடயங்களைத் திரட்டவுள்ளதாக தெரிவித்த அமைச்சர் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

---

### ஜனாதிபதி..

களுக்கான அமைச்சர் கே.சண்முகம் இதன்போது பாராட்டியுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் நிலவுகின்ற வலுவான ஒத்துழைப்புகளை மேலும் விஸ்தரிப்பதற்கு புதிய கொள்கையின் ஊடாக சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மக்களின் நலன்புரி விடயங்களுக்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் குறித்தும் கே. சண்முகம் இதன்போது திருப்தி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

சர்வதேச மட்டத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தியுள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர், கூடிய விரைவில் சிங்கப்பூர் விஜயத்தில் ஈடுபடுமாறும் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சுகவீனமுற்றுள்ள லீ குவான் யூ விரைவில் குணமடைய வேண்டுமென பிரார்த்திப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தச் சந்திப்பின்போது சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

---

### விசாரணை...

யாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மேற்படி சந்திப்பில், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமான சின்னத்துரை தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் உள்ள எக்ஸ்போ பவிலியன் மாகோசா விடுதியில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் நாட்டின் தற்கால அரசியல் விவகாரங்கள், கனடாவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான உதவித்திட்டங்கள் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. சமகால அரசியல் விவகாரங்களில் புதிய அரசிடம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களாகிய இராணுவ வசமிருக்கும் தனியார் காணிகளை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல், வடக்கு மாகாண சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை சம்பந்தமான பிரேரணை போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், கடந்த காலங்களில் மீள் குடியேற்றத்தின் பின்னர் அழிந்து போன பிரதேசங்களை மீளக் கட்டியமைத்தல், மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை உருவாக்கி, அவர்களை இயல்பு வாழ்வில் ஈடுபடுத்தியது போன்றவற்றில் முன்னேற்றத்தை எட்டியிருப்பதைச் சுட்டிக்காட்டிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பிரமுகர்கள், தொடர்ந்தும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திட்டச் செயற்பாடுகள், சிறார்களுக்கான போசாக்கு மற்றும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் மேம்பாடு ஆகியவற்றுக்கு கனடா ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தினர்.

# முல்லைக் கடலில் இந்திய மீனவர் அத்துமீறல்

## தடுத்து நிறுத்த கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்கள் மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் மீன்பிடியினை முற்றாகக் கட்டுப்படுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தித் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளினால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்திய றோலர்களின் மீன்பிடிக்கு இலங்கை கடற்படையினர் ஆதரவாகச் செயற்படுகின்றனர்.

இதேவேளை தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற பகுதிகளில் பெருமளவு இடம்பெற்றுவருகின்றது. இதன் காரணமாக மாவட்டக் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடியினால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அட்டைத்தொழில் கட்டுப்படுத்தப்படவேண்டும் எனப் பல்வேறு விடயங்களை கடற்றொழிலாளர்கள் முன்வைத்ததுடன், இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறும் அத்துமீறிய மீன்பிடிகளை கட்டுப்படுத்துவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் பெறப்படும். பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நந்திக்கடல் பகுதியில் நடைபெறும் சட்டவிரோத கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையெடுக்கப்படும். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடித் திணைக்களத்தில் காணப்படும் ஆளணி நெருக்கடியினை பயன்படுத்தி சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபடுபவர்களின் மீது நடவடிக்கையெடுப்பதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறப்படும் என்பதுடன், சனி ஞாயிறு தினங்களில் நந்திக்கடலில் சட்டவிரோத கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்கான தீடீர் பரிசோதனைகளை பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட நன்னீர் மீன்பிடி தொடர்பான பல்வேறு விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. (160)

# எரியுண்ட நிலையில் பெண்ணின் சடலம்

(மன்னார்)

மன்னார் எமிழ் நகர் கிராமத்தில் கைவிடப்பட்ட கட்டடம் ஒன்றிலிருந்து எரியுண்ட நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலம் மன்னார் சின்னக்கடை பகுதியைச் சேர்ந்த செபஸ்தியான் திரேசா என்பவருடையது என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

குறித்த பெண் நேற்றுக் காலை வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

நெடுநேரமாகியும் வீடு திரும்பாத அவரை தேடிச் சென்ற உறவினர்கள் அவரது சடலத்தை இனங்கண்டுள்ளனர்.

சடலத்தின் அருகிலிருந்த மண்ணெண்ணெய் போத்தலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் சடலம் மீட்கபட்ட இடத்திற்கு அருகில் அமைந்துள்ள வியாபார நிலையத்தில் மண்ணெண்ணெய் மற்றும் தீப்பெட்டி ஆகியவற்றை குறித்த பெண் கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

திருமணமாகாத குறித்த பெண் ஏற்கனவே தற்கொலைக்கு முயன்றுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரவு விடுதிக்குச் செல்ல அனுமதி வேண்டும்

## மாலக்க சில்வா சார்பில் மனு

இரவு விடுதிக்கு தன்னை செல்லவேண்டாம் என்று விதிக்கப்பட்டுள்ள தடையை தளர்த்துமாறு மேர்வின் சில்வாவின் மகனான மாலக்க சில்வா, தனது சட்டத்தரணியின் ஊடாக நீதி மன்றத்தில் கோரியுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் நீதின்றத்திலே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய ஜோடிகள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கைதாகி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள மாலக்க சில்வாவின் பிணை நிபந்தனைகளை முடியுமா இல்லையா என்பது குறித்து மார்ச் 23ஆம் திகதி பரிசீலிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இரவுநேர களியாட்ட விடுதிகளுக்குச் செல்ல சந்தேக நபருக்கு பிணை நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதென அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளதுடன், நீதிமன்றால் அவ்வாறு நிபந்தனை விதிக்க முடியாது என்றும் அது அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்றும் சட்டத்தரணி சுட்டிக் காட்டியுள்ளார்.

# வாள் வெட்டில் இளைஞர் காயம்

(நெல்லியடி

நெல்லியடி கொடிகாமம் வீதியில் குறிப்பாக 750 வழித்தட வீதியின் புதிய. சந்தைக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் நின்ற இளைஞன் இனந்தெரியா நண்பனால் வாள் வெட்டுக்கு இலக்காகிய சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞன் அன்றையதினம் இரவு 7.00 மணியளவில மேற்படி வீதியில் மோட்டார் சைக்கிளில் ஹெல்மட் அணிந்தவாறு நின்றுள்ளார்.

இச்சம்பவத்தில் அப்பகுதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த இளைஞனைத் தமது ஹெல்மெட்டால் தாக்கிய நிலையில் வாளால் வெட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுகாயத்துடன் தப்பிய குறித்த இளைஞன் இரவு 9.30 மணியளவில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாகவும் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

# ஆட்டோ சாரதி பிணையில் விடுதலை

நெல்லியடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வீதியால் வந்த தம்பதிகளை மோதி விட்டுத் தப்பியோடிய முச்சக்கர வண்டிச் சாரதிக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த முச்சக்கர வண்டிச் சாரதி தம்பதிகளை மோதித்தள்ளிவிட்டு தப்பியோடி நிலையில் காயமடைந்த தம்பதிகள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

# சிறுவன் காயம்

மாலுசந்தி வைரவர் கோவிலடியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கு.சஞ்சயன் (வயது-10) என்பவரே காயமடைந்தார். (18)


## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 1985 ★ 12 ★ 09

விண்ணில் 2012 ★ 02 ★ 25

அமரர்

**திரு. செல்லையா ஜெயபாலன்**

எண்ணத்தில் குழந்தையாய்
எப்போதும் கவிதையாய்
அண்ணனுக்குத் தம்பியாய்
அம்மாவுக்கு ஏக புத்திரனாய்

மண்ணின் மாணிக்கமே
மரகத தேனே.
எங்கள் கண்கள் உன்னைத் தேட
எங்களை விட்டு பிரிந்தாயடா நீ

எப்போதும் வாசலில் காத்து
நிற்கின்றேன் உன் அண்ணன்
வருவாயோ நீ என்னிடம்
தெய்வத்தின் வரமாக
நீ எம்மை விட்டு
மூவாண்டு பிரிந்தாலும்
உன் நினைவு மட்டும்
நெஞ்சைப் பிளக்குதையா

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டும் நான்

6 ஆம் வட்டாரம்
அம்பாள் புரம்
வவுனிக்குளம்

(C/3824)

சகோதரன்
எஸ்.குகன்


# நடைபாதை வியாபாரம் பாதசாரிகளுக்கு சிரமம்

(யாழ்ப்பாணம்)

மன்னார், அரச பேருந்து தரிப்பிடப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் நடைபாதைகளை ஆக்கிரமித்துள்ளமையினால் பொதுமக்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இவ்விடையம் தொடர்பில் பல தடவைகள் எடுத்துக்கூறியும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

குறிப்பாக நடைபாதை வியாபாரிகள் மக்கள் நடந்து செல்லுகின்ற பாதைகளில் தமது வியாபாரப்பொருட்களை வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

அது மட்டும் இன்றி அப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அளவுக்கு மேலாக தமது வர்த்தக நிலையங்களை விஸ்தரிப்பு செய்துள்ளதுடன் தமது கடைகளுக்கு முன்பாக பொருட்களை வைத்து பாதசாரிகளுக்கு தொடர்ந்தும் இடையூரை ஏற்படுத்தி வருகின்றனர். இச்செயற்பாடுகளினால் நாளாந்தம் பஸ் தரிப்பிடத்துக்கு வரும் பெண்கள் மற்றும் வயோதிபர்கள் குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார்கள் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

மக்களின் பிரச்சினைகள் குறித்த வர்த்தகர்களுக்கு மன்னார் நகர சபை பல ஆலோசனைகளை வழங்கியும் அவர்கள் எமது ஆலோசனைகளை உதாசீனம் செய்து தொடர்ந்தும் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே, இச்செயற்பாடுகள் தொடருமாக இருந்தால் பொது மக்களின் நன்மை கருதி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிர்மாணப் பணிகள் நிறுத்தம்

முல்லைத்தீவு - விசுவமடு இளங்கோ புரத்தில் மாலை நேர வகுப்புகளை நடாத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட கட்டடமொன்று நிதியுதவியின்மையினால் கட்டடப் பணிகள் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ளது.

உதவியமைப்பு ஒன்றினால் ரூபா எழுத்தையாயிரம் பெறுமதியான கட்டட உள்ளீடுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் கட்டடப் பணிகள் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபா நிதியின்மையினால் மாலை நேர வகுப்பிற்கான கட்டடப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இளங்கோபுரம் மாதர் சங்கத்தினால் இக்கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

227 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் 80இற்கு மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் இக்கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.